145

வ்யய வருஷ சித்திரை மீ

ஸம்புடம் - 5
ஸஞ்சிகை - 4

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :
நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

April, 1946
Vol. 5, No. 4

3L
N46.5.4.
18220

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	70
2.	ஜிஜ்ஞாஸா பரிஹாரம்	74
3.	ஐந்தாவது வார்ஷிக மாலோல ஸதஸ்	77
4.	இன்னிசையால் இன்ப மூட்டிய நாயகி	84
5.	செய்திகள்	88
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	94

குறிப்பு:— 74-வது பக்கத்தில் ஆரம்பிக்க வேண்டிய 'ஜிஜ்ஞாஸா பரிஹாரம்' என்னும் வியாஸம் தவறுதலாக மறுபக்கத்திலும், மறுபக்கத்திலிருக்க வேண்டிய விஷயம் 74-வது பக்கத்திலும் தவறுதலாக மாற்றப்பட்டிருப்பதை கவனித்துப் படிக்க.

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள்—மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்ரசுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம் தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.



ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 5	வ்யய வருஷம் சித்திரை மீ	ஸஞ்சிகை 4

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பித ஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி
ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபதஸக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

—o—

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M. A., B. L., அட்வோகேட், திருச்சி.]

இதற்குள் யாரோ ஒருவன் மஹாமோஹன் பேச்சுக்கு அடியிற் கண்ட படி பதில் கூறுவதாகச் சத்தம் அவன் காதில் விழுகிறதாக நடித்து அதற்குப் பிறகு பதில் கூறுகிறான். இவன் காதில் விழும் ச்லோகமாவது :—

"𑌦𑌾𑌮𑍍𑌪𑌤𑍍𑌯𑌂 𑌸𑌹𑌜𑌂 𑌸𑌮𑌸𑍍𑌤𑌜𑌗𑌤𑌾𑌂 𑌵𑌿𑌧𑍍𑌰𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌭𑌾𑌵𑌶𑌾𑌲𑌿
𑌕𑌾𑌮𑌿𑌨𑍍𑌯𑌾𑌦𑌿 𑌵𑌿𑌹𑌾𑌯 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌿𑌣𑌿 𑌤𑌦𑍈𑌤𑌂𑌕𑌯𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑍈𑌯𑍍𑌯 𑌨𑍃𑌣𑌾𑌂 ।
𑌭𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍇𑌷 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌵𑌪𑍃𑌥𑌗𑍍𑌭𑌵𑌸𑍍𑌤𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑌂𑌯𑌤𑌕𑌂
𑌵𑍈𑌰𑌸𑍍𑌯𑌂 𑌵𑌿𑌷𑌯𑌾𑌦𑌿 𑌹𑌨𑍍𑌤 𑌵𑌿𑌷𑌯𑌾𑌂 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌨𑌂 𑌦𑌶𑌯𑌨𑍍𑌤𑌿 ॥"

ஈச்வர தத்வம் பதிபத்நி ரூபமாக உலக மாதா பிதாக்களாகவே ஸஹஜமாக நித்யமா யுள்ளது. 'अत्मनात्मानमेवाहं', 'अनयाम्यमिवोदितम्' என்றபடி, பதிபத்நிகள் சேர்ந்து நிஷ்ப்ரத்யூஹ ப்ரணயகடிதமான ஒரே தத்வம் போல் உள்ளது. இந்த ஈச்வரேச்வரீ தாம்பத்யம் நித்யம்; ஸஹஜம். அநுக்ரஹ மயமானது மாத்ரு தத்வம். நிக்ரஹாநுக்ரஹங்களும் நியமந தண்டநாதிகளும் கலந்தது பித்ரு தத்வம். இரண்டும் கேவலம் ஜ்ஞாநாநந்த ஸ்வரூபமான திவ்ய தத்வம். ப்ராக்ருத மொன்றும் கலவாத தாம்பத்யம். ஆண் பெண் என்று தம்பதிகளாக உலகத்தில் ஏற்படுவது, இருவரும் சேர்ந்து ஸஹதர்மசாரத்தால் கைங்கர்யம் செய்யவே. வைகுண்டத்திலும் நித்யஸூரிகளில் சில தாம்பத்யங்கள் உள்ளன. அவை ப்ரக்ருதி ஸம்பந்தமற்றவை. ஈச்வர தம்பதிகளின் திருவுள்ளத்தால் அவர்கள் கைங்கர்யத்திற்காக அவை அமைந்துள்ளன. 'ஜஹக்ஷு பாவஸாக:' என்று சொல்லியிருப்பதும், பலர் சேர்ந்து சேஷிதம்பதிகளுக்குக் கைங்கர்யம் செய்து இன்புறுவதையே காட்டும். உங்கள் விரோசநருடைய தர்சநத்தில் ப்ராக்ருத தேஹத்தின் போகங்களே மட்டுமே கொள்ளுகிறார்கள். தேஹத்தைக் காட்டிலும் ப்ரக்ருதி ஸ்வபாவ மற்ற ஆத்மா என்னும் சேதந தத்வமே அவருக்குக் கிடையாதே. நித்யஸூரிகளுடைய சரீரம் ஜ்ஞாநாநந்த மயம்; பாஞ்சபௌதிக மல்ல. நச்வரமும் விகாரியும் பல துன்பங்களைத் தருவதுமான தேஹமேதானே உங்களுக்கு ஆத்மா. உங்கள் ஆத்மா உங்களுக்கு நித்ய மில்லையே. தேஹத்தோடு ஆத்மாவும் நாசமடைவது தானே உங்கள் தர்சநம். ப்ரத்யக்ஷத்திற்கு அப்பால் உங்கள் கண்ணும் புத்தியும் செல்லமாட்டா. உங்களுக்குப் பரலோகமே கிடையாது. நித்யமான - அழியாத - ப்ரக்ருதி கலவாத - சுத்தாநந்தத்தை ஈச்வர மிதுநத்தின் அநுக்ரஹத்தால் பெறும் நித்யவாழ்வை இச்சிக்கும் எங்களுக்கு, உங்கள் தேஹாத்ம தர்சநம் எப்படி ரஸிக்கும்? அது எங்களுக்கு அத்யந்தம் விரஸமே.

[இங்கே பேசுவது சாங்தோக்ய உபநிஷத்தின் தஹரப்ரஜாபதி வாக்யங்களிலுள்ள முக்தி முதலியவற்றைப் பற்றியே. சார்வாக தர்சநம் 'விரோசந தர்சநம்' என்று பேசப்படுகிறது.]

இதைக் கேட்டதும் மஹாமோஹனுக்குக் கோபம் வந்து, 'இவனை வெளியில் துரத்துங்கள்; இவன் நைஷ்டிக வாதியான கோட்டான்' என்று சத்தம் போடுகிறான். [கோட்டானுக்குப் பகலில் வெட்ட வெளிச்சத்தில் கண் தெரியாது. நல்ல இருட்டில்தான் அதற்குக் கண் தெரியும். இருட்டில் அது ஸஞ்சரிக்கும்; பகலைப் பார்க்கக் கண்கூசி, பகலில் தன் கண்ணை மூடிக்கொண்டிருக்கும். ப்ரத்யக்ஷமாகத்தெரிகின்றவை யெல்லாம் அநாதரம். 'ஒவ்வொருவருக்கும் அஜ்ஞாதமான ஏதோ பரலோக முண்டு ஈச்வரத்வ முண்டு' என்று நீங்கள் பேசுகிறீர்கள். அஜ்ஞாநத்தில் செல்லும் ப்ரத்யக்ஷஸித்தமான தேஹாதிகளிலும் தேஹ இன்பங்களிலும் உங்கள் கண்ணும் புத்தியும் செல்வதில்லை; நீங்கள் கோட்டான் போன்றவர்கள் என்பது மஹாமோஹனுடைய வாதம். தன் மதம் ப்ருஹஸ்பதியின் மதமென்று அவன் பெருமை கூறுகிறான்.]

மயில் தோகையில் எப்படி பல வர்ணங்கள் ஸ்வபாவமாக அமைந்திருக்கின்றனவோ, அப்படியே ப்ரபஞ்சத்தில் எத்தனையோ விசித்ரங்கள் தாமாக அமைந்திருக்கின்றன. அதற்கெல்லாம் காரணம் கேட்கலாமோ? 'முள்ளு கூர்மையாயிருக்கிறதே, குத்துகிறதே, அது ஏன் அப்படி யிருக்கிறது?' என்று கேட்கலாமோ? 'அதன் ஸ்வபாவம் அது' என்போம். காகதாலீய ந்யாயம்தான் காரண கார்ய ப்ரச்ந விஷயங்களில் கொள்ளவேணும். தாமாகவே விசித்ர விசித்ரமாய் வஸ்துஸ்வபாவங்கள் அமைந்துள்ளன. அநாதிஸித்தமான வஸ்துஸ்வபாவங்களின் காரணத்தைப்பற்றி 'ஏனப்படி?' என்று கேட்கக்கூடாதென்று ஆஸ்திக சாஸ்த்ரங்களும் சொல்லுகின்றன.

" கூரணவிஷுயஎவா உக்திரிதஜூதாதெைவ்யூ:
விதயஷிதி உயாநவ்ஹாதிகெ விநவ்யவெஸி ।
ஸ்தநய்ஹஜூஸூ ஹூக்ஷவஸொவ நீயவஸ்ஹஸஹா
ஸஹூஹஹணவிஷவெந ஸஹணா ஹொமஹவஸாஉவ்ஓ ॥ "

ஶரீரமும் இந்த்ரியங்களும் அடியோடு உச்சிந்நமாகிவிடுவது மோக்ஷ மென்னும் புருஷார்த்தம் என்பது, அவர்களுள் ப்ராசீநர்களுடைய கொள்கை. தோஷமும் இந்த்ரியங்களும் இல்லாமலுள்ள ஒரு தசையை எவன்தான் மோக்ஷ ஸுக மென்றுவிரும்புவானென்று நான் அதைக் கண்டித்து எழுதியிருக்கிறேன். ப்ரஹ்மத்தோடு ஸமாநமான இன்பத்தின் அநுபவம்தான் உத்தம புருஷார்த்தமென்று அவர்கள் பேசுகிறார்கள். நமக்கு அபரிமிதமான இன்பத்தை அளிப்பதும், நம்மை நியமித்து ஆளுவதும், ஸ்த்ரீகளாகிய நம் ப்ராணேச்வரிகள். அவர்கள்தான் நமக்கு ப்ரஹ்மமென்று முன்பே சொன்னேன். நம்முடைய ப்ரஹ்மத்தோடு ஸமாநபோகமான போகஸாம்யத்தைத்தானே நாமும் மோக்ஷ ஸுக

மென்கிறோம். நாம் சொல்லும் பெரும் ஸுகத்தை வாக்கினல் இப்படிப்பட்ட தென்று வர்ணிக்க முடியுமோ? நம்முடைய இன்ப பாரவச்யம் மனத்திற்குத் தான் எட்டுமோ? கேவலம் அநுபவத்திற்கு மட்டுமே சிறிது புலப்படுவதாகும்.

தூர்மதி:—இப்படி உலகத்தை நீங்கள் காப்பாற்றிக்கொண்டிருக்கையில், வேதாந்த ஸித்தாந்திகள் நம்மைத் தூஷித்துக்கொண்டும் ஸுகப்படும் ஜீவர்களை ஸுகத்தைவிட்டு விரக்தர்களாக்கிக் கெடுத்தும், உம்முடைய கைகண்ட ப்ரத்யக்ஷ இன்ப போக மதத்தைத் தூஷிக்கிறார்களே! ஏன்?.

மஹாமோஹன்:— நமக்கென்ன கெட்டுப்போம்? துஷ்டர்கள் தங்கள் ஸ்வபாவத்தை விடுவரோ? புத்தியுடையவர்கள் அவர்கள் பேச்சைக் கேட்டுக் கெட்டுப்போகமாட்டார்கள். வேதாந்தங்களைப் படித்துவிட்டு, அதில் சொல்லியிருக்கும் சாந்தி முதலிய குணங்களுக்கு நேர் விரோதமாய்ப் புற மதத்தினரை அவர்கள் பரிஹஸிக்கிறார்கள். தாங்கள் தடஸ்தரென்று சொல்லிக்கொண்டு புற மதப் பெரியாரை அவமாநம் செய்யவே பார்க்கிறார்கள். 'நாங்கள் சாந்தர்' என்று சொல்லிக்கொண்டு இப்படிப் பரநிந்தை செய்யுமிவர்கள் நம்மை என்ன செய்யக் கூடும்? நம் ஸித்தாந்தத்தை ப்ரதிஷ்டாபநம் செய்யத் தடபுடலாய்ப் பேசும் வாக்ஜாலமுள்ளவரைத் தேடவேணும். யாரங்கே?

[டம்பன் முதலியோர் த்வரிதமாய் ஓடிவந்து] இதோ நாங்கள் இருக்கிறோம்.

மஹாமோஹர்:—வாருங்கள். நம் குடும்பத்தையே அழிக்க விரும்பும் நம் குலப்பிள்ளையாகிய துஷ்ட விவேகனைப்போல் அல்லாமல், ஸம்ஸாராபிவ்ருத்தியால் நம் குலத்தின் அபிவ்ருத்தியைக் கோரும் ஸாதுக்கள் நீங்கள்.

டம்பனும் தர்ப்பனும்:— மஹாராஜர் அநுக்ரஹத்தால் எங்கும் தடங்கலில்லாத செல்வாக்குடன் நாங்கள் விளங்கி வருகிறோம். இச்சேவகனர் என்ன பணி செய்யவேணும்?

மஹாமோஹர்:—காமன் முதலியவருடைய செய்தி என்ன?

டம்பன்:— [தனக்குள்ளே] சொல்லட்டுமா? [வெளிப்படையாக] ஸ்வாமி! 'அரசரிடம் உண்மையே பேசுவது அழகு' என்னும் ந்யாயத்தை அநுஸரித்து, கெடுதலாயிருந்தாலும் கண்டதைச் சொல்லுகிறேன். மநஸ் ஆசா ஸமுத்ரத்தில் மூழ்கியிருந்தாலும், வஸந்த காலம் கொழித்திருந்தாலும், மலயமாருதம் வீசினுலும், ஸௌப்திக வத ப்ரயத்நம் பலிக்காமல் ஜீவன் தபஸ்ஸைக் குலைக்க முடியாமல் திரும்பி வந்தது முதல், மந்மதன் தூக்கம் வந்ததுபோல் ஏங்கி, ஐந்து பாணங்களில் ஒன்றையும் தொடுவதில்லை. மற்றொரு ஸங்கதியும் விண்ணப்பிக்கிறேன். விவேகனுடைய சூழ்ச்சியால் ஜீவனுக்குத் தன் உடம்பிலேயே வைராக்யம் முற்றி ஒன்றும் வேண்டாமென்று பேதைத் துறவியா யிருக்கையில் லோபன் அவனை யணுகி வசப்படுத்துவது எப்படி?

தர்ப்பன்:—தேவனே! க்ரோதனுடைய தத்கால ஸ்திதியை நான் நேரில் பார்த்தேன். உள்ளதைத் தெரிவிக்கிறேன். ப்ரளய காலத்தில் போல் மண்டியெரிந்து கொளுத்தும் அவன், இப்பொழுது விரக்தி யென்னும் விஷக் கலப்பால் தூங்கி வழிகிறுன்; பேச்சு மூச்சில்லே.

மஹாமோஹன்:—குலக்கனுன விவேகனுடைய குறும்புகள் எவ்வளவு தூரம் போகின்றன பார்ப்போம். அவனுக்கு இடமே யில்லாமல் செய்ய வேணும். அதர்மத்தையே நாம் தர்மமாகக் கொண்டு அவனே ஜயிக்கவேணும். நம் குலத்தை ரக்ஷிக்கவே முயற்சிசெய்யும் நாம், அதர்மத்தையே நம் தர்மமாகக் கொள்ளலாம். குடும்ப ரக்ஷணத்திற்காக அதர்மம் செய்தாலும் அது தர்மமே யாகும். இதிஹாஸம் படித்தவர்கள், 'ஒருத்தனுக்குத் தர்மமாவது மற்ருருத் தனுக்கு அதர்மமாகும்; அவனவனுக்குத் தர்மாதர்மங்கள் வேறு; தர்மாதர்மங் கள் எல்லோருக்கும் ஏகரூபம் என்பதில்லே' என்பர். விவேகன் கோட்டை களில் நம் படைகளேப் புகுத்தி த்வம்ஸம் செய்யச் செய்வோம். விவேகனே ஜயிப்பது எம்மாத்ரம்? கீரையைப் பிடுங்க அரிவாள் வேணுமா? பஞ்சைக் கொளுத்தத் தீக்கென்ன ஸம்ரம்பம் வேணும்? டம்பா! நீ உறுதியுடன் புண்யநதி தீரங்களில் ப்ரவேசித்து உன் வேலேயை மும்முரமாகச் செய். விரக்தி யென் னும் அஹங்காரக் கொழுப்போடு தவம் செய்யும் வனங்களில் தர்ப்பன் புகுந்து கொண்டு தவம் செய்பவரின் மனத்தில் குடிகொள்ளட்டும்.

[இப்படிப் பேசியதும், பத்நிகளோடு டம்ப தர்ப்பர்கள் வெளியே செல்கிருர்கள்.]

[தொடரும்]

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

வ்யய ஞு சித்திரை மீ

1௳	சனிக்கிழமை	த்வாதசி 20-9; மேஷரவி 24-47 சூந்ய திதி; வர்ஷப் பிறப்பு பண்டிகை
2௳	ஞாயிற்றுக்கிழமை	த்ரயோதசி 21-10 சூந்ய திதி.
3௳	திங்கட்கிழமை	மேஷ சுக்ல சதுர்த்தசி திதி.
4௳	செவ்வாய்க்கிழமை	பௌர்ணமி திதி: சித்ரா பூர்ணிமா.
15௳	சனிக்கிழமை	ஸர்வ ஏகாதசி.
19௳	புதன்கிழமை	ஸர்வ அமாவாஸ்யை.
21௳	வெள்ளிக்கிழமை	த்விதியை - த்ருதீயை திதி த்வயம்.
22௳	சனிக்கிழமை	சதுர்த்தி திதி - அக்ஷய த்ருதீயை.
23௳	ஞாயிற்றுக்கிழமை	பஞ்சமி திதி. ஸ்ரீ பகவத் ராமாநுஜன் திருநக்ஷத்ரம்.
24௳	திங்கட்கிழமை	ஷஷ்டி திதி:
29௳	சனிக்கிழமை	ஸர்வ ஏகாதசி.
30௳	ஞாயிற்றுக்கிழமை	மேஷ சுக்ல த்வாதசி.
31௳	திங்கட்கிழமை	மேஷ சுக்ல த்ரயோதசி திதி ஸ்ரீ மதுரகவிகள் திருநக்ஷத்ரம்.

"उभयप्रकारविशिष्टे नियन्त्रंशे तदवस्थातदुभयविशिष्टतारूप एव विकारो भवति; कारणावस्थायाः कार्यावस्थापत्तिरूप एव विकारः प्रकारद्वये प्रकारिणि च समानः; स्वरूपान्यथात्वं ज्ञानसङ्कोचविकासरूपविकारोभय विषयनिष्ठ विकारासम्भवाभिप्रायाः" என்ற ஆத்மாதிகரண ஸ்ரீ பாஷ்யமும் ஜந்மாதிகரணபாவ ப்ரகாசிகையும் இங்கு அநுஸந்தேயம்.

"परमात्मनोऽपि सत्यत्वं न स्यात्, यदुभयमत्र दृश्यते विकारवत्त्वात्, इति चेन्न — स्वरूपेणैवोभयमेतत् ज्ञानेनवा विकारस्यान्यथात्वस्य तदर्थत्वात्। नित्यत्वेऽपि परमात्म यदुभयं तज्ज्ञानस्यापि विशेषसङ्कोचादिरेव परिणामत्वात् परमात्मनोऽपि सत्यत्वं नस्यात् इति चेन्न। कालकृत विकाराभावस्यैव तदर्थत्वात्" ஆகவே ஜகத்காரணத்வாதி குணங்களில் காலபேதத்தாலே வரும் மாறுதலாகிய அபரமார்த்தத்வம் அவத்யமன்று.

ஸத்யத்வாதிகளான ஸ்வரூப நிரூபக தர்மங்கள் ஐந்துக்கும் மற்றைக் குணங்களுக்குமுள்ள வாசியை கெளிதம், கௌநதம், ஆவனோதம், என்று பக்ஷ த்ரயத்தைக் கொண்டு நிரூபித்திருக்கிறார் ஆநந்தாத்யதிகரண பாவப்ரகாசிகையில். அந்த பக்ஷ த்ரயத்தையும் அநுவாதம் செய்து முதல் பக்ஷரீதியிலே ப்ரக்ருத ஜிஜ்ஞாஸை யானது உத்தாபநம் செய்யப்பெற்றிருக்கிறது. அதில் மூன்றுவது பக்ஷமே இசையக்கூடியது. மற்றிரண்டு பக்ஷங்கள் யுக்திக்கும் ஸித்தாந்தத்திற்கும் பொருந்தவில்லை. எனெனில்:—

'ப்ரஹ்ம ஸ்வரூபம் நிர்விகாரமாகையால், அதை ஆச்ரயித்த ஸத்யத்வாதிகளும் நிர்விகாரங்கள்; பரமார்த்தங்கள். மற்றைக்குணங்களோ வெனில், ப்ரக்ருத்யாதி விசிஷ்ட ப்ரஹ்ம நிஷ்டங்கள். ப்ரக்ருதி காலம் இவை பரிணாமமுள்ளவை. அவற்றோடு கலந்து நிற்கும் தர்மங்களும் அவை போல் ஸவிகாரங்கள்; அபரமார்த்தங்கள். இதுதான் ஸத்யத்வாதிகளுக்கும் மற்றவற்றுக்கும் உள்ள வாசி என்பதாக முதல் பக்ஷம். இப்படியாகில் 'சேதந ஸ்வரூபம் நிர்விகாரமானதாகையால்' அதை ஆச்ரயித்த தர்மபூத ஜ்ஞாநமும் நிர்விகாரமாகவேணுமே! நிர்விகாரமான ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஆச்ரயித்த ப்ரக்ருதி விகாரமுடையதன்றோ? ஸத்யத்வாதிகள் ஐந்தைத் தவிர்த்து மற்றவை யெல்லாம் விசிஷ்ட நிஷ்டங்களே' என்பதும் சரியன்று. பெரிய ரஹஸ்யத்திலே, தத்வத்ரயாதிகாரத்திலே ஸத்யத்வாதிகளான ஈச்வர குணங்கள் ஐந்தை ப்ரஸ்தாவித்து, மேலே,

> 'மற்றுள்ள குணங்களும் திவ்யமங்கள விக்ரஹாதிகளுமெல்லாம் ஈச்வரனுக்கு நிரூபித ஸ்வரூப விசேஷணங்களாயிருக்கும் ....இக்குணங்களெல்லாம் ஸர்வ காலத்திலும் ஸ்வரூபாச்ரிதங்களாக இருக்கும்' என்று ஸாதிக்கிறார்.

இதனால் பரத்வோபயுக்தங்களான ஜ்ஞாந சக்த்யாதிகளும் ஸௌலப்யோபயுக்த வாத்ஸல்யாதிகளும் ஸத்யத்வாதிகளைப் போலவே ஸ்வரூபாச்ரிதங்களே என்பது ஸ்பஷ்டமாகிறது.

இனி இரண்டாவது பக்ஷத்தில், 'ஸத்யத்வாதிகள் ஐந்தும் தர்மியாகிய ப்ரஹ்ம ஸ்வரூபம்; மற்ற குணங்கள் வேறுபட்டவை' என்பதாக இவற்றுக்குப் பரஸ்பரம் வைஷம்யம்

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌾𑌯 𑌨𑌮𑌃

ஜிஜ்ஞாஸா பரிஹாரம்

'பகவதுபாஸநம்' என்கிற மகுடத்தின் கீழ் 'ஜிஜ்ஞாஸை' யொன்று சென்ற மாதத்து ஸஞ்சிகையில் ப்ரசுரமாகி யிருக்கின்றது. அதன் ஸாராம்சமாவது:—

ஸத்யத்வம் முதலிய ஐந்து குணங்கள் ப்ரஹ்மத்தின் ஸ்வரூப நிரூபகங்கள் என்றும், மற்றைக் குணங்கள்நிரூபித ஸ்வரூப விசேஷணங்கள் என்றும் ஸித்தாந்தம்செய்திருக்கிறார்கள். அதற்குக் காரணம்:-ஸத்யத்வாதிகள் சுத்த ஸ்வரூபத்தி லுள்ளவை. ஸ்வரூபம் விகார மற்றது. ஆகவே அவையும் விகார மற்றவை; பரமார்த்தங்கள். ஜகத் காரணத்வம் ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களோவெனில், சேதநா சேதந விசிஷ்ட ப்ரஹ்ம ஸ்வரூபத்தைச் சேர்ந்தவை. ப்ரக்ருதி முதலிய விசேஷணங்கள் விகரிக்கும் தன்மை யுடையவை. அதை அநுஸரித்து இக்குணங்களும் விகாரம் பெறுகின்றன. இவ்வகையில் இவை அபரமார்த்தங்க ளாகின்றன. ஆனதுபற்றியே, இவை நிரூபித ஸ்வரூப விசேஷணங்களே. விசிஷ்ட ஸ்வரூப நிரூபக தர்மங்களான இவைகளுக்கு, விகரிப்பதால் ஜநிக்கும் அபாரமார்த்யம் ப்ரஸங்கிக்குமே. இந்தத் தோஷம் பாதக மில்லையா என்பதே.

முதலில் இந்த ஜிஜ்ஞாஸை விமர்சிக்க வேண்டியதா யிருக்கிறது. ஸர்வஜ்ஞத்வம் என்பது, விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூப நிரூபகம் என்று ஜிஜ்ஞாஸையில் காண்கிறது. இதற்குமுன் 'ஜ்ஞாநத்வமாவது: எப்பொழுதும் அஸங்குசிதமாக இருக்கும் ஜ்ஞாநத்தை உடைத்தா யிருக்கும் தன்மை' என்பதாக விவரணம் காண்கிறது. இப்படியாகில் இதுவே ஸர்வஜ்ஞத்வம். ஸத்யத்வாதிகளில் இரண்டாவது இது; சுத்த ஸ்வரூபத்தைச் சேர்ந்தது. இதை விசிஷ்ட ஸ்வரூபத்திற்குரியதாகக் கொண்டு ஏற்பட்ட ஜிஜ்ஞாஸைக்கு அவகாச மில்லையே.

இரண்டாவதாக: இனி ஜகத் காரணத்வாதிகள் விசிஷ்ட ப்ரஹ்மத்தின் ஸ்வரூப நிரூபகங்கள் என்பதும் விமர்சநீய மாகிறது. ஸ்வரூப நிரூபக தர்மங்களும் அவற்றின் தர்மியும் எங்கும் தனித்து ஜ்ஞாந கோசர மாவதில்லை. இது, '𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 𑌯𑌤𑌃' இத்யாதிகளில் நிர்ணீதமானது. சாண்டில்ய வித்யையில் ஜகத் காரணத்வம் உபாஸ்ய மாகிறது. சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மம் அங்கு உபாஸ்யமன்று; ப்ரதர்த்தநவித்யையில்சிதசித் விசிஷ்டம் உபாஸ்யமாகச்செய்தேயும், ஜகத்காரணத்வம் விஷய மாகவில்லை. ஆகவே ஜகத்காரணத்வத்தை சிதசித் விசிஷ்ட ப்ரஹ்மத்திற்கு ஸ்வரூப நிரூபகமாகக் கொள்வதற் கில்லை. நிரூபித ஸ்வரூப விசேஷணமே இது. ஆகிலும் விகரிப்பதால் ஜநிக்கும் அபாரமார்த்யமானது ஜகத்காரணத்வத்திற்குப் பாதக மில்லையா? என்று சங்கிக்கலாம். இது அநுமதமே.

'𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌾𑌤𑍍 𑌕𑌾𑌲𑌭𑍇𑌦𑌾𑌨𑍍 𑌭𑌵𑌤𑌿 𑌜𑌨𑌨𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌧𑍍𑌵𑌂𑌸𑌨𑌾𑌨𑌾𑌮𑍍 ।' என்றார் ஸாராவளியில் ஆசார்யன். கால பேதத்தாலேயே ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்கள் நடைபெறுகின்றன. இவை மூன்றும் விருத்தங்க ளாகையால் ஏககாலத்தில் நடைபெறமாட்டா.

ப்ரம்ஹத்திற்கு ஸ்வரூப விகாரமோ தர்மபூத ஜ்ஞாநத்வாரகமான விகாரமோ இசையவில்லையே. இஷ்டங்களான சில விகாரங்கள் ப்ரஹ்மத்தினிடமும் உண்டு. அநிஷ்டமாக வரும் விகாரமே அதற்கு இல்லை என்பதாக ஸித்தாந்தம்.

189220

காட்டியிருக்கிறது. அத்வைதிகளின் பக்ஷமே இது. இதை ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் நிரஸித்து, 'ஸத்யாதி வாக்யமானது ஸத்யத்வாதி விசிஷ்ட ப்ரஹ்மபரமே' என்பதாக ஸித்தாந்தம் செய்தருளினார் ஸ்ரீபாஷ்யத்தில். ஆகவே இப்பக்ஷமும் க்ராஹ்ய மன்று.

மூன்றாவது பக்ஷத்தில், ஸ்வரூபபரமான வாக்யங்களில் ப்ரதிபந்நங்கள் ஸத்யத்வாதிகள் ஐந்தும்; மற்றவை அப்படியல்ல' என்பதாக வைஷம்யம் கொண்டிருப்பது ஸித்தாந்த ஸம்மதமாகும். 'ப்ரஹ்மவிதாப்நோதி பரம்' என்பதாக, ப்ரஹ்மம், அதன் உபாஸநம் முதலியவற்றை ப்ரதிஜ்ஞை செய்து, முறையே அவற்றை விவரணம் செய்ய ஆரம்பித்து, ப்ரஹ்ம ஸ்வரூபத்தை 'ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம' என்று ஸத்யத்வாதிகளைக் கொண்டே நிரூபித்தது. பரமாத்ம ஸ்வரூபத்தைக் கேட்ட நாரதருக்கு 'யத்ர நாந்யத் பச்யதி' என்று ஸத்யஸ்வரூபம் ஆத்மா என்றே ஸநத்குமாரர் வசநம் பூமவித்யையில் காண்கிறது. 'கம் ப்ரஹ்ம கம் ப்ரஹ்ம,' 'ஆநந்தோ ப்ரஹ்ம' இத்யாதிகளில் நிரதிசயாநந்த ஸ்வரூபத்வம் ப்ரதிபந்நமாகிறது. அப்படியே 'ஏதத்வை தத் அக்ஷரம் கார்கி' இத்யாதியாகவும் 'அத பரா யயா தத் அக்ஷரமதிகம்யதே' என்றிவ்வாறாகவும் அக்ஷரப்ரஹ்ம ஸ்வரூபத்தை நிரூபிக்குமிடத்தில் அமலத்வத்தைக்கொண்டே நிரூபணம் செய்கிறது ச்ருதி. 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே...... தத் ப்ரஹ்ம' என்பதாக ஜகத்காரணத்வத்தைக்கொண்டுப் ப்ரஹ்ம ஸ்வரூபத்தைத் தெளிவிக்கவில்லையா? என்பதாக சங்கிக்கலாம். ஆனால் இது அநுவாதரூபமாய்ப் புரோவாதமாகிய ஸத்வித்யா வாக்யத்தையே எதிர்பார்க்கின்றது. அங்கு 'ஸதேவ' என்று உபக்ரமம். 'தத் ஸத்யம்' என்று உபஸம்ஹாரம். ஆகவே காரணத்வ ப்ராபக வாக்யத்திலும் ஸத்யத்வத்தையே ஸ்வரூபமாக்கி, அதற்குமேல் காரணத்வத்தைச் சொல்லியிருப்பதால் இது நிரூபித ஸ்வரூப விசேஷணமே என்று ஸித்தமாகிறது. ஸஜாதிய விஜாதீய வ்யாவ்ருத்தி முகத்தாலே ப்ரஹ்ம ஸ்வரூபத்தை நிரூபிக்கின்றமையால் ஸ்வரூபநிரூபகமென்று இவ்வைந்தையும் கொண்டது. மற்றவை நிரூபித ஸ்வரூபவிசேஷணங்களாகும். லக்ஷணவாக்ய ப்ரதிபந்நங்களாகையும் அல்லாமையும் இரண்டுக்குமுள்ள வாசி. இதுதான் மூன்றாவது பக்ஷத்தின் தத்வம். இந்த பக்ஷரீதியில் மற்ற குணங்கள் ப்ரஹ்ம ஸ்வரூபத்தை ஆச்ரயித்தே நிரூபித ஸ்வரூப விசேஷங்களாகலாம். விசிஷ்ட ப்ரஹ்மத்தை ஆச்ரயித்தவை யென்றோ, குணகுணிகள் அபிந்நங்களென்றோ, முன்பக்ஷங்களிற் போல் கொள்ளவேண்டியதில்லை.

ஆகவே ப்ரதம பக்ஷமானது ஸித்தாந்த ஸம்மதமன்று. அதையநுஸரித்து ஜகத்காரணத்வாதிகள் அபரமார்த்தங்களாகையால், இவை எப்படி ஸ்வரூப நிரூபங்களாகலாம் என்று உத்திதையான ஜிஜ்ஞாஸைக்கு அந்தப் பக்ஷமே சரியன்று என்பது சரியான பரிஹாரமாகும். அந்தப் பக்ஷ ரீதியிலும் வரும் அபாரமார்த்யம் அவத்யகரமன்று. ப்ரஹ்ம ஸ்வரூபத்திலோ, அதன் தர்மபூத ஜ்ஞாநத்திலோ வரும் விகாரமன்றே. இது ஸம்மதமே. அடியேனுடைய ஸமாதாநம் இது.

தி. ஈ. வீரராகவாசாரியர்,
ஸ்ரீ மதுராந்தகம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப

ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகாய நம:

ஐந்தாவது வார்ஷிக மாலோல வித்வத் ஸதஸ்

[ஸ்ரீ. உப. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமி, ஸ்ரீ கார்யம், ஸ்ரீ அஹோபில மடம், காம்ப் ஹைதராபாக்கம்]

நிகழும் பார்த்திவ வர்ஷம் தை மீ 10-ந் தேதி பகல் 3-மணிக்கு, அநேக பண்டிதர்களும் திவான்பஹதூர் ஸ்ரீ. S. ஆராவமுது ஐயங்கார் முதலிய லௌகிக ப்ரபுக்களும் கூடியிருக்கும் ஸமயத்தில் ஸ்ரீ அழகியசிங்கரால் உபந்யஸிக்கப்பட்ட விஷயம்:—

'ஸ்ரீ பாஷ்யத்தை வாசித்து ப்ரவ்ருத்திப்பித்தல்' என்று ஸ்ரீ பாஷ்யகாரர் நியமநத்தை அநுஸரித்தும், 'ஸந்தோஷாய ஸதாம் விதந்வதி ஸஹஸ்ரஸூர்யா ஸ்திதிம்' என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்திருப்பதை ஒட்டியும், 'அத்யாபயந்தே விதுஷ:' என்கிற காரணத்தை இட்டும், இம்மாலோல வித்வத் ஸபை ஸ்ரீ அழகிய சிங்கரால் ஏற்படுத்தப்பட்டது. அநேக பண்டிதர்கள் கூடி ஸ்ரீ பாஷ்யத்தில் வாக்யார்த்தங்களைச் சொல்லி 'தக்ஷந்தி அபரே ஜநா:' என்கிற கணக்கில் எல்லோரும் ஸந்தோஷப்படுவதற்குக் காரணமாவதுடன், நம் ஸித்தாந்தம் தழைத்து ஓங்கி வளரவேண்டு மென்கிற அபிப்ராயத்துடனும் இந்த ஸபை ஏற்படுத்தப்பட்ட தென்பதை ஸாதித்துவிட்டு, ஸ்ரீ பாஷ்யத்தின் பெருமையையும், ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ பாஷ்யத்தில் ஈடுபட்டிருக்கும் அம்சங்களையும், யதிராஜ ஸப்ததியிலிருந்து அநேக ச்லோகங்களினாலும், ராமாநுச முனி இன்னுரை சேர்ந்த அநேக ப்ரமாணங்களைக்கொண்டும் '**ஸ்ரீ பாஷ்யத்தில் ஈடுபாடு**' என்கிற விஷயம் வெகு அழகாய் உபந்யஸிக்கப்பட்டது.

* * * *

அன்றைத் தினம் ஸாயங்காலம் வித்வான்களுடைய வாக்யார்த்தங்கள் நடந்தன. பிறகு, வித்வான் ஸ்ரீ கார்யம் தையார் ஜோஸ்யம் மாடபூசி ரங்காசாரியரால் உபந்யஸிக்கப்பட்ட விஷயம்:—

"லக்ஷ்மீஜநக்ருதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரேஷ்டார ஈஶ்வரம் ।
நாஸ்திவிஷ்ணோ: பரம் தத்த்வம் ஸதா ஜநா: ॥"

என்கிற கால மாகையினால், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் விசேஷ கடாக்ஷம் பண்ணி, 'த்வயம் விளைந்த திருப்பதி' என்று கொண்டாடப்பட்ட மதுராந்தக நகரில் ஸ்ரீ அழகியசிங்கரால் கலாசாலை சாச்வதமாக ஏற்பாடு செய்து, 'ஸ்திரப்ரதீப' என்கிற ச்லோகார்த் தத்தை நிலைநாட்டியாயிருக்கிறது.

ஸர்வ தேச ஸர்வ காலத்திலும் 'ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்கிறபடி உலக மெங்கும் வ்யாபிக்கும்படி 'ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா'

என்னும் பத்ரிகை மணிப்ரவாளத்திலும் ஹிந்தி பாஷையிலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்த வித்வத் ஸபை, ஸந்தோஷார்த்தமாகப் பண்டிதர்களைக்கொண்டு வாக்யார்த்தங்கள் மூலமாய், ஆங்காங்கு நம் ஸித்தாந்தத்தை ஸ்தாபித்துக் கொண்டு விளங்கிக்கொண்டு வருகிறபடியினாலும், ஸ்ரீ அழகியசிங்கர்,

"[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥"

என்கிற ச்லோகார்த்தப்படி, ஸ்ரீரங்கம் பெருமாள்கோயில் முதலான திவ்ய தேசங்களில் மாலோல ஸதஸ்ஸை நடத்தி வருவதினாலும், '[illegible]' என்கிறபடி ஸ்வாமி தேசிகனுக்கு அபிமதமான ஸித்தாந்தங்கள் ஸ்தாபிக்கப் பட்டு வருகின்றன. ஸ்ரீ அழகியசிங்கர் இம்மாலோல ஸதஸ்ஸை ஏற்படுத்தியதினால், '[illegible]' என்றபடி எல்லாரும் க்ஷேமத்தை அடைவதற்குக் காரணமாகிறது. அர்ச்சாவதாரத்தில் ஸர்வருக்கும் ஸகல க்ஷேமங்களையும் உண்டுபண்ணவேண்டுமென்கிற எண்ணத்துடன், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் தன்மடியில் ஸ்ரீ மஹாலக்ஷ்மியை வைத்துக்கொண்டு, பிராட்டியைத் தன் திருக்கைகளினால் அணைத்து, பிராட்டி திருமுகமண்டலமே தனக்குப் போக்யமாக நினைத்துப் பிராட்டியைக் கடாக்ஷித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கிறான். அதனால் நம்முடைய ஸித்தாந்தம், பராசர பகவான் கூறியதீர இக்கலி காலத்தில் ஓங்கி வளரவேண்டுமென்கிற திருவுள்ளத்தினால் இச்சபைக்கு 'மாலோல ஸபை' என்னும் இத்திருநாமம் ஸ்ரீ அழகியசிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்டது.

லோகோஜ்ஜீவநார்த்தமாக அநேக கார்யங்களைச் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும் ஆசார்யர்களை ஆராதிக்கும் தேசமே எல்லாத் தேசங்களைவிடச் சிறந்த தேசம். "[illegible]। [illegible] ॥ [illegible]। [illegible]" என்கிறபடி இத்தேசம் 'பாக்யநகர' மென்று பெயர் பெற்றிருக்கிறது. "[illegible]। [illegible] ॥" என்கிறபடி பாக்யநகர மென்னும் நாமா இதற்கு அந்வர்த்த மாயிற்று. ஆகையால் ஸ்ரீ அழகியசிங்கர் விஷயத்தில், "[illegible]" என்று சொல்லியிருப்பதினால், ஆசார்ய ஸ்மரணம் மங்கள தமமாயும், ப்ரதிஷித்த ஸம்பாஷணத்திற்கு ப்ராயச்சித்த மென்று சொல்லியிருப்பதினால் பாபஹரமாயும், "[illegible]। [illegible]" என்று இருப்பதால் ஸ்வயம் போக்யமாயும், '[illegible] ஜயதி।' என்று விளங்குகிறபடியினால் நம்ப்ரதிவாதி நிரஸநத்தில் '[illegible]

ராஜ:' என்று திருவடி சொன்னதுபோல் நாம் சொல்லிக்கொண்டு ஸஞ்சாரம் செய்யப் பயமில்லை. ஆசார்ய விஷயத்தில் அவனைப் போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் தவிர, வேறொன்றும் மாயனும் காணகில்லான்.

இந்த ஸதஸ்ஸை ஸ்ரீமான் திவான்பஹதூர் ஸ்ரீ. உப. S. ஆராவமுதையங்கார், ஸ்ரீ. உப. A.ராமஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ. உப. B. K. ராமாநுஜய்யங்கார், ஸ்ரீ. உப. L. N. நரஸிம்மய்யங்கார், ஸ்ரீ. உப. A. ஸ்ரீநிவாஸாசாரியர் முதலான ஆஸ்திக ப்ரமுகர்கள் விச்வரூபம் முதற்கொண்டு ராத்ரி டோலோத்ஸவ பர்யந்தம் எழுந்தருளியிருந்து, திருநக்ஷத்ர தினத்தன்று வித்வான்களுக்கு ஸ்ரீ அழகிய சிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸம்பாவனைகளை நேரில் கண்டு அநுபவித்து மிகவும் ஸந்துஷ்டரானார்கள். ஸ்ரீமான் ஆராவமுதய்யங்கார் ஸ்வாமி, தம்முடைய பாக்ய விசேஷத்தைச் சொல்லி முடியாதென்றும்,

'ஸுஹோஹா ஞ்ஊஹோஹா ஞ்ஂ நகொவவ ஜௌகஸாம்।
யநிதும்வரஊா நகூம்வமூணஃம்வஹஸ நாதநஜ॥'

என்றும் சொல்லி முடித்தார். ஸ்ரீ அழகியசிங்கரால் மந்த்ராக்ஷதை அநுக்ரஹிக்கப்பட்டு எல்லோரும் எழுந்தருளினார்கள்.

திருநக்ஷத்ர தினத்தன்று அவகாச மில்லாததினால், மறுதினம் 'வ்யஸ நஸஉ நவ்ருதொதவயா ஜயயஜவஷிகா:। ஹுவஆ நவியாவஷாவிம்ஸெஜயவஜவஷிகா:॥' என்று ஸ்வாமி தேசிகனாலே கொண்டாடப்பட்ட தத்வடீகையில் விசேஷ வாக்யார்த்தங்களும் நடைபெற்று இச்சபையானது முடிவுபெற்றது.

ஸ்ரீ. உ. வே. ஆஸ்தான வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிக்கும், ஸ்ரீ. உ. வே. ஸ்ரீமுஷ்ணம் ஸ்வாமி குமாரர் வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமிக்கும், பிள்ளைப்பாக்கம் ஸ்ரீ. உ. வே. ராமாநுஜாசார்ய ஸ்வாமிக்கும், பெருமாள்கோவில் இளங்காடு ஸ்ரீ. உப. ரங்காசார்ய ஸ்வாமிக்கும் ஸம்பாவனைகள் ஸ்ரீ நியமனப்படி அனுப்பப்பட்டன.

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபில மடத்து மாலோல வித்வத் ஸபையின் மாண்பு

1. பார்த்திப வாண்டு தைத்திங்கள் பகரு முத்தி ராடத்துக்
கீர்த்தியார் முனிவ னகோபிலத்துக் கீழ்மை யகற்றுந் தேசிகன்முன்
வார்த்தையில் வல்ல வித்துவான்கள் வந்து கூடி வேதத்தால்
சீர்த்தியார் விசிட்ட அத்துவைதஞ் சிறக்கச் செய்யும் மாசபையாம்.

2. மற்றதன் பேரே மாலோலம் என்பர் மாசில் அறிவோர்கள்
உற்றிடு மதற்காம் பெற்றியிவண யோரா யிரமாஞ் சிரமார்ந்த
சேற்றமார் சேட னேயெனினுஞ் செப்பற் கரிய தாமென்றால்
சிற்றறி வினன்யா னெவ்விதத்தாற் சிறப்பித் தியம்பற் கேற்றவனே.

ஸ்ரீ அஹோபில மடத்து 42-வது பீடாதிபதியாகிய ஸ்ரீமத் வேதமார்க்க பரமஹம்ஸேத்யாதி பிருதாலங்கிருத ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்திர மஹா தேசிகன் திருவடித் தாமரை கட்குப் பொலாரம் துரைத்தன உயர்கலாசாலைத் தமிழாசிரியர், வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசார்யர் சூட்டிய சொன்மாலை.

1. திருவோ டுறையு மாளரியின் றிருத்தாள் போற்றுந் திருவுடையான்
தரையோர் மதிக்கும் முக்கோலன் சதுர்மா மறையுஞ் சாத்திரமும்
புரையே யனுகா வகையறிந்தோன் பொன்னி சூழு மரங்கத்துள்
மருவுஞ் சீர்வண் சடகோபன் வண்மா மலர்த்தாள் வணங்கிடுவாம்.

2. திருமால் பெயரே யோதுந்தன் சிறுவன் மீதே சீற்றமுடன்
பெருவா ளோங்கும் பொன்னவனைப் பிடித்து மடிமேல் வைத்துத்தன்
பெரிதாம் நகத்தாற் பிளந்தானைப் பேணி வணங்கும் பெருமையனைத்
திருவா ரரங்கச் சடகோபத் தேசிக னார்தம் தாள்பணிவாம்.

3. சிறுவன் சொல்லை மெய்ப்பிக்கச் சேர்ந்தோர் தூணில் நரவரியாய்
உறையும் பெருமான் றிருவடியே யுளத்திற் கொண்ட வுத்தமனைத்
துறவிக் கோலத் துறைவானைத் தொழுவார் வினைக ளறுப்பானைக்
குறைவில் சீர்வண் சடகோபக் குருவை வணங்கிக் குறைவறுப்பாம்.

4. அங்கண் ஞால மஞ்சவங்கோ ரரியா யவுணன் மார்பிடந்து
செங்கண் மறவர்க் கிருப்பிடமாஞ் சீரார் சிங்க வேள்குன்றிற்
செங்க மலத்தா ளோருறையுஞ் செல்வன் பாதம் போற்றிசெயும்
எங்கும் புகழார் யதீந்திரனு மிறைவன் பாத மேத்திடுவாம்.

5. வானோ ரஞ்ச மண்ணஞ்ச வணங்கிச் சிறுவன் வாழ்த்திநிற்கத்
தானோ ரரியாத் தடந்தூணிற் சார்ந்தே யிருந்தான் றுள்போற்றும்
தேனார் பொழில்சூழ் திருவரங்கச் சீர்வண் வகுளாப் பரணப்பேர்
ஆனா னடியே யடைந்திடுவோ மவலப் பிறவி யறுத்திடவே.

6. அன்னை போலு மருளுடையா னடைவார் துன்ப மகன்றொழியப்
பொன்னி னேடு முறைந்தருளும் பொங்கு முனையார் சிங்கத்தின்
நன்மா மலர்போற் றிருவடியே நாடச் செய்யுந் நற்குருவாம்
மன்னுஞ் சிங்க வேள்குன்றின் மடத்துக் குரியான் மகிதலத்தே.

7. தானே யிறையென் றிருந்திடுமத் தருக்கா ரவுண னென்றிடுமவ்
வானார் தம்பத் தாளரியாய் வந்து குதித்த தயாபரனை
வானோ ரிறைய வண்மலர்மேல் மங்கைக் குரிய மன்னவனை
ஆனா தருச்சித் தாட்செய்யு மம்மா முனிவ னடிபணிவாம்.

8. நல்லே நெஞ்சே நாம்தொழுதும் நரத்தி னுருவிற் சீயத்தை
அல்லி மாதர் புல்லிநின்ற வாயி ரந்தோ ளெம்மானைச்
சொல்லுந் தொன்மை யகோபிலத்துத் தூய முறையி லருச்சிக்கும்
நல்ல முனிவன் ருள்பற்றி நம்முன் வினைகள் அறுத்திடவே.

9. வேத முரைக்குஞ் சதுமுகனும் விரையார் கொன்றைச் சடையோனும்
ஓது முறையாற் புகழ்பாட வொளிர்மா மலர்மேல் மங்கையுடன்
ஏத மகற்று மாளரியை யென்றும் போற்றும் முனிவரனும்
கோதில் சீர்வண் சடகோபன் குணமே சொல்லிக் குறைவறுப்பாம்.

10. சீர்வண் வகுளா பரணப்பேர் சீரா ரரங்கச் சடகோபன்
பார்வண் யதிகட் கிந்திரனும் பகரும் பெரிய தேசிகனைக்
கார்நின் றுறையு மகோபிலத்துக் கமலப் பாவை யுடனுறையும்
சீர்மன் னரிக்குச் சேவைசெயும் சிறப்பார் முனியைச் சேவிப்பாம்.

வாழ்த்துப் பாடல்

தைத்திங்க ளுத்திராடத் தவதரித்தோன் வாழியே
சதுர்மறையின் பொருளுரைக்குந் திறனுடையோன் வாழியே
புத்தலர்மேல் திருவரியின் தாள்பணிவோன் வாழியே
புன்மையெலா மடியார்கட் கறுத்திடுவோன் வாழியே.
மெத்தபுகழ் அகோபிலத்து மடத்ததிபன் வாழியே
மேதினிமே லரிசமயம் வளர்த்திடுவோன் வாழியே
பத்துநான்கோ டிரண்டாகும் பதத்திருந்தோன் வாழியே
பண்பார்வண் சடகோப மாமுனிவன் வாழியே.

ஸ்ரீ மாலோல வித்வத் ஸதஸ்ஸில் அந்வயித்த வித்வான்கள்

1 ஸ்ரீ. உ. வே. புள்ளம்பூதங்குடி - ராஜகோபாலாசார்யர்
2 ,, வடுவூர் - ராமபத்ராசாரியர்
3 ,, குறிச்சி - ராமபத்ராசார்யர்
4 ,, குறிச்சி - ரங்காசார்யர்
5 ,, ப்ரஹ்மதேசம் - ராமாநுஜாசார்யர்
6 ,, தையார் - ஜோஸ்யம் (ஸ்ரீகார்யம்) ரங்காசார்யர்
7 ,, சிலுக்கூர் - வேங்கடராகவாசார்யர்
8 ,, முக்கூர் - ராஜகோபாலாசார்யர்
9 ,, வஜ்ரம் - நரஸிம்ஹாசார்யர்
10 ,, பெருக்காரணை - சக்ரவர்த்தியாசார்யர்
11 ,, திருக்கள்ளம் - நரஸிம்ஹராகவாசார்யர்

12 ,, வில்லிவலம் - ஸுந்தராசார்யர்

13 ,, திருக்கள்ளம் - ஸுந்தரராஜாசார்யர்

14 ,, T. S ராமஸ்வாமி அய்யங்கார்

15 ,, முக்கூர் - ஸ்ரீநிவாஸாசார்யர்

16 ,, வில்லிவலம் - நாராயணாசார்யர்

17 ,, மேல்பாக்கம் - நரஸிம்ஹாசார்யர்

18 ,, பாதூர் - ராகவாசார்யர்

19 ,, பாதூர் - கோபாலாசார்யர்

20 ,, அத்தி - க்ருஷ்ணமாசார்யர்

21 ,, வளையபுத்தூர் - ஸம்பத்குமாராசார்யர்

22 ,, பாப்பான்குளம் - N. வரதராஜ அய்யங்கார்

23 ,, திருக்குடந்தை - அக்னிஹோத்ரம் தாதாசார்யர்

24 ,, ,, ஸ்ரீநிவாஸபாட்டராசாரியர்

25 ,, தோட்டாலம்-வேணுகோபாலாசார்யர்

26 ,, திருப்பதி - சேட்லூர் ராகவாசார்யர்

27 ,, திருநாராயணபுரம் அநந்தாண்பிள்ளை ஆழ்வார் அய்யங்கார்

28 ,, திருப்பதி . D. T. தாதாசாரியர்

29 ,, விஜயநகரம் - ராமாநுஜாசார்யர்

30 ,, அத்தி - ஸாரநாதாசார்யர்

31 ,, வனபர்த்தி - ராமாநுஜாசார்யர்

32 ,, அழிசூர் - க்ருஷ்ணமாசார்யர்

33 ,, பெரிய ராகவாசார்யர்

34 ,, பருத்திப்பட்டு - ஸ்ரீநிவாஸாசார்யர்

35 ,, கோஷ்டீபுரம் - ராமாநுஜாசார்யர்

36 ,, கூத்தபாக்கம் - ரங்காசார்யர்

37 ,, மோஹனூர் - தேசிகாசார்யர்

38 ,, கருடபுரம் - திருமலாசார்யர்

39 ,, திருநாராயணபுரம் - ராமாநுஜாசார்யர்

40 ,, கோஷ்டீபுரம் - தாமோதராசார்யர்

41 ,, நாவல்பாக்கம் - நீலமேகாசார்யர்

42 ,, திருப்பதி - வாஸுதேவாசார்யர்

43 ,, கத்தவால் - ஸ்ரீநிவாஸாசார்யர்

44 ,, கந்தாடை - ஸ்ரீரங்காசார்யர்

45 ,, கோழியாலம் - சடகோபாசார்யர்

46 ,, திருவரங்கம் - ஸ்ரீநிவாஸாசார்யர்

47 ,, நாவல்பாக்கம் - ராஜகோபாலாசார்யர்

48 ,, மேல்மா - நரஸிம்ஹ தாதாசார்யர்

49 ,, ஏமப்பூர் - ஸ்ரீநிவாஸாசாரியர்

50 ,, சிறுதாமூர் - சேஷாசார்யர்

51 ,, சக்ரவர்த்தி மைஸூர் திருமலாசார்யர்

52 ,, மைஸூர் - வீரராகவாசாரியர்

53 ,, மேலக்கோட்டை - எம்பார் நரஸிம்ஹாசார்யர்

54 ,, நாவல்பாக்கம் - தேவநாதாசார்யர்

55 ,, T. K. கோபாலஸ்வாமி தாதாசார்யர்

56	,,	திருக்கள்ளம் - வேதாந்தாசார்யர்
57	,,	நாவல்பாக்கம் - தாததேசிகாசார்யர்
58	,,	P. B. K. ஸ்ரீநிவாஸாசார்யர் (சென்னை)
59	,,	வண்டபாடு - லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர்
60	,,	நெல்லூர் - P. N. க்ருஷ்ணஸாமி ஐயங்கார்
61	,,	,, N. ரங்கராமாநுஜ ஐயங்கார்
62	,,	K. V. தேசிகாசாரியர், ஸீதாராம்பாக்
63	,,	கருடபுரம் - வரததேசிகாசார்யர்
64	,,	ஸ்ரீபெரும்பூதூர் - ஸௌந்தரராகவாசார்யர்
65	,,	வேலூர் - S ரங்காசார்யர்
66	,,	வடுவூர் - கனபாடி துரைஸாமி ஐயங்கார்
67	,,	கமலாபுரம் - கனபாடி ஸந்தாந கோபாலையங்கார்
68	,,	பழவேரி - வரதாசார்யர்
69	,,	ஸீதாரம்பாக் - B. கோபாலாசார்யர்
70	,,	போலாரம் - தமிழ்ப்பண்டிதர் K. P. வேங்கட க்ருஷ்ணமாசார்யர்
71	,,	சித்தூர் - செம்பாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர்

நமது சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவுக்கு இப்பொழுது ஐந்தாவது ஆண்டு நடந்து வருகிறது. நமது ஸத்ஸம்ப்ரதாயம் தழைத் தோங்கவேண்டு மென்ற ஒரே அபிஸந்தியைக் கொண்டு, பண வ்யயத்தையும் கணிசியாது, இப்பத்ரிகையை ப்ரவர்த்திப்பித்து நடத்திவருவது ஸ்ரீ அழகியசிங்கரின் பரம காருண்யத்தைப் புலப்படுத்துகிற தென்பதை நமது நேயர்கள் நன்கறிவர். குடும்ப ஸம்ரக்ஷணமும் ஸுகரமாகப் பண்ணமுடியாத குடிலமான இக்காலத்தைக் கவனிப்பின், இத்தகைய அரிய பெரிய ஸத்கார்யங்கள் எங்ஙனம் இடையூறின்றி நடைபெறும் என்ற கவலையே மேலிட்டிருக்கிறது. ஆதலின் இவ்விஷயத்தில் நமது நேயர்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் த்ரவ்ய ஸஹாயமும் நமக்கு அத்யந்தம் ஆவச்யகம் என்பது சொல்லாமலே விளங்கும். ஆதலின், பாக்யாதிகர்களான நமது ஆஸ்திக சந்தாதாரர்கள் அனைவரும் க்ருபைபண்ணி, இவ்வர்ஷத்துச் சந்தாத் தொகையைக்கூடிய சீக்ரமே செலுத்திவிட வேண்டுமென்று ப்ரார்த்திக்கப்படுகிறார்கள். சிலர் தமது சென்ற வர்ஷத்துச் சந்தாத் தொகையை (ரூ. 2) விஸ்ம்ருதியினாலோ கார்யாந்தர நிர்ப்பந்தத்தாலோ இன்னும் செலுத்தாதிருக்கின்றனர். ஆதலின் யாவரும் க்ருபைபண்ணித் தமது சந்தாத் தொகைகளைக் கூடிய சீக்ரமே நிச்சேஷமாகச் செலுத்தி உதவினால் பரமோபகாரகமா யிருக்கு மென்பதை மீண்டும் ஜ்ஞாபிக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே தயாலக்ஷ்மீ நரஸிம்ஹவரவரமுநயே நம:

இன்னிசையால் இன்ப மூட்டிய நாயகி

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி அம்மாள், பஸவங்குடி, பெங்களூர்.]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி.]

——○——

இவை ஒன்றிற்கும் ப்ரம்ஹராக்ஷஸ் மயிரிழை கூட இணங்கினதாகத் தெரியவில்லை. கண் இமைக்காமல் கற்சிலைபோல் உட்கார்ந்திருக்கிறது. அதன் முகத்தில் தான் என்ன அலக்ஷ்ய பாவம்! பக்தன் முடிவில் என்ன சொல்கிறான் பார்ப்போம்!

"வாஸுதேவம் பரித்யஜ்ய யேऽந்யம் தேவம் உபாஸதே ।
தேஷாம் கதிம் ப்ரபத்யேயம் யத்யஹம் நாகமே புந: ॥"
"நாராயணம் ஸமாந்யைஸ்து தேவைஸ்து ஸாம்யம் கரோதி ய: ।
தஸ்ய பாபே நயிஷ்யேயம் யத்யஹம் நாகமே புந: ॥"

"ஸகல தேவதைகளையும் அடக்கி யாளும் பரதேவதை வாஸுதேவன். அவன் எங்கும் உள்ளும் புறமும் பரவி நிற்பவன்; அண்டினோரை ஆதரிக்கும் கல்பக தரு. அத்தகைய பரமபுருஷனுக்கு ஸ்மரணம், கீர்த்தநம், வந்தநம், அர்ச்சநம் முதலிய பூஜைகளைச் செய்யாமல் எவர்கள் மற்ற தெய்வங்களை நாடுகின்றனரோ, அன்றியும், தேவாதிதேவன், ஸர்வலோகசரண்யன், ஸர்வாந்தர்யாமி,யாகயஜ்ஞங்களால் ஆராதிக்கப்படுபவன், மோக்ஷ இச்சையுடையவர்களால் த்யானிக்கப்படும் எம்பெருமான், மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அருளும் வரதன், முக்தர்கள் அடைந்து ஆநந்திக்கும் பரமபுருஷன், கொள்ளக் குறைவிலன், வேண்டிற்றெல்லாம் தரும் வள்ளல், ஈடும் எடுப்பும் இல்லாத ஈசன் - இம்மஹா மஹிமை பொருந்திய ஸ்ரீமந் நாராயணனையும் கர்மத்திற்கு உட்பட்டு உலக மேடையில் ஸூத்ரதாரியாகிய அவ்வெம்பெருமானால் ஆட்டி வைக்கப்படும் மற்ற தேவர்களையும் ஸமமாக எண்ணி எவர் பூஜிக்கின்றனரோ, அவர்கள் அடையும் பாபத்தை நான் அடையக் கடவேன்" என்று கடுஞ் சபதம் செய்தான்.

இவன் சபதங்களைக் கேட்டதுதான் தாமதம். ப்ரம்ஹராக்ஷஸன் முகத்தில் வியப்பும் களிப்பும் அச்சமும் ஒருங்கே ப்ரதிபலித்தன. "அப்பா! நீ பரம பாகவதோத்தமன் என்று உணர்ந்தேன். உன்னுடைய ஆச்சர்ய ப்ரதிஜ்ஞைகள் என்னுடைய உள்ளத்தை வசீகரித்துவிட்டன. உன் உத்தம வ்ரதத்துக்கு நான் தடைசெய்ய விரும்பவில்லை. அவச்யம் போய்வரக்கடவாய்" என்று கூறிப் பணிவுடன் வந்தநம் செய்கிறான்.

ப்ரம்ஹராக்ஷஸ்ஸால் விடப்பட்ட நம்பாடுவான் அடைந்த ஆநந்தம்தான் என்ன! ஸம்ஸாரமாகிற பாலைவனத்திலிருந்து அடிச்சூடு தாங்காமல் விரைந்து ஓடிவரும் முக்தனைப்போல் ஓடோடியும் வருகிறான். கோவிலுக்கு வெகுதூரத்

தில் நின்றுகொண்டு அத்யாச்சர்யமாய்க் காநம் செய்கிறான். என்ன உருக்கம்! ராகம் எவ்வளவு இனிமை! அவ்வின்னிசையில் லயித்த எம்பெருமான் திருமுக மண்டலம் மலர்ந்து விளங்குகிறது.

“ஜய ஹ்ருஷீகேச விசேஷ விந்யஸ்த ஜாமதே ।
நமோ நாராயணே த்ருஷ்ணா-ஸ்வாக: ஹ்ருந்நாமதேய ॥”

ஸூர்யோதய ஸமயம். பக்தன் காநவ்ரதம் நிர்விக்நமாய் முடிந்தது. முடிவில் மங்களம் பாடினான். தனக்கு நற்கதியின் பொருட்டுப் பகவத் பதகமலங்களில் சரணாகதியும் செய்தான். என்ன அவஸரம்! வந்த வேகத்தைக் காட்டில் பதின்மடங்கு விரைவாகச் செல்லுகிறான். வழியில் யாரோ ஒரு திவ்ய புருஷன் வருகிறார். அவர் யார்? தாமரைக் கண்ணனே. அவர் திருமுகத்தில் அன்பும் ஆதரவும் ததும்புகின்றன. என்ன இனிய மொழி! “அப்பா ஸௌம்யா! நீ யார்? எங்கு விரைந்து செல்கிறாய்? இப்பக்கம் உனக்குப் புதிது போலும். இம்மார்க்கம் செல்லாதே. அடர்ந்த வநம். துஷ்ட ம்ருகங்கள் வஸிக்கும் இடம். பூத பிசாசங்கள் ஸஞ்சரிக்கும் கானகம். இவ்வழியில் சென்றால் உன் உயிருக்கே ஆபத்து. திரும்பி வேறு வழியாய்ச் செல்லக் கடவாய்” என்றான். நம்பாடுவான் அதற்கு இணங்கினனா? அவன் ஸத்யஸந்தன்.

“ஸ்வாமி! வாஸ்தவம். தேவரீர் எனக்கு ஹிதத்தையே கூறுகிறீர். ஆனால் ஒரு ப்ரம்ஹரக்ஷஸ்ஸுக்கு என் உடலை ஆஹாரமாய் அளிப்பதாய்ச் சபதம் செய்து வந்திருக்கிறேன். ஸத்யத்தைக் காட்டில் ப்ராணன் பெரிதோ? எனக்கு விடை யளிக்க வேண்டும்” என்று வாயு வேக மனோவேகமாகச் செல்கிறான்.

திவ்யபுருஷன் மனமகிழ்ந்து ஆசீர்வாதங்கள் செய்து மறைகிறார். காந சிகாமணியை வெகு தூரத்தில் கண்டது ப்ரம்ஹரக்ஷஸ். ஆதரவுடன் ஓடோடி வந்து எதிர்கொண்டழைக்கிறது. இதென்ன விசித்ரம்! பயங்கர வடிவம்; நீண்ட கோரைப் பற்கள்; செம்பட்டை மயிர்; ரத்தத்தைக் கக்கும் கண்கள்; ஆனால் அதன் இன்சொல்லும் புன்சிரிப்பும் என்ன மதுரம்! அதன் ஸ்வபாவம் ஏன் இவ்விதம் மாறியது? “அப்பா! நீ ஸத்யஸந்தன்; தர்மசீலன்; பரம பாகவதன்; உன்னால் உலகத்துக்குப் பேருபகாரம். இப்பொழுது அந்யாயமாய் நீ உயிரிழப்பது தகாது. உன்னைப் புசிக்க என் மனம் விரும்பவில்லை. க்ருபை கூர்ந்து எனக்கு ஒரு வரம் அளித்தருள்வாய். நீ ராத்ரி பகவானைப் பாடி மகிழ்வித்த காநத்தின் பலனை எனக்குக் கொடுத்து உதவ வேண்டுகிறேன். புண்ணியங்களைப் பர்வதம்போல் குவித்திருக்கும் உனக்கு இது ஒரு பொருட்டல்ல.” என்றது.

நம்பாடுவான் முகத்தில் ஏளனச் சிரிப்பு தோன்றியது. அவன் தைர்யம்தான் என்ன? வியக்கத்தக்க மனோ உறுதி. “ராக்ஷஸா! இது என்ன உபயோகமற்ற வ்யாபாரம்? கீதத்தின் பயனைத் தருவது அஸாத்யம். என் ப்ராணனும் கீதமும் ஒரே மதிப்பென்று நினைத்தாய் போலும்! ஓட்டாஞ்செல்

லிக்கும் தங்கத்துக்கும் உள்ள பேதம் என்று நினை. என் வாக்குறுதியின்படி வந்தேன். நீயும் உன் சொல்லை நிறைவேற்றலாம் " என்றான்.

ப்ரம்ஹரக்ஷஸ் காலில் விழுந்து சரணாகதி செய்கிறது. மிகவும் தீனமாய்க் கெஞ்சுகிறது. " அப்பா நம்பாடுவான்! நீ சொல்வது ந்யாயம்தான். நீ ஒரு வைராக்ய நிதி. உனக்கு உயிர் ஒரு பொருட்டல்ல. ஆனால் உன்னை மிகவும் வேண்டுகிறேன். நீ உத்தம குணம் வாய்ந்த ஒரு மஹான். உன்னால் என் சாபம் நீங்கவேண்டும். நான் முற்பிறப்பில் ஸோமசர்மா என்னும் அந்தணன். படுகுழியில் தள்ளும் பணத்தில் ஆசை கொண்டேன். பிறரை வஞ்சித்துப் பொருள் பறிக்க யாகம் என்னும் ஒரு வ்யாஜம் தேடினேன். அவ் யாகத்தில் ஐந்தாவது தினம் கொடிய வயிற்றுநோய் கண்டு இறந்தேன். நான் செய்த மஹா பாபத்தினால் இக்கீழ் ஜந்மம் அடைந்தேன். இதிலிருந்து மீட்பவர் உன்னையன்றி வேறொருவ ரில்லை. உன்னுடைய இன்னிசையில் லயித்த எம்பெருமானுடைய திருவுள்ளம் உகந்து விளங்குகிறது. அவர் ஸந்தோஷ மடைந்தால் என் பாபங்கள் தீயினில் தூசாகும். நான் அவரை ஆநந்த மூட்டும் ஸ்திதியில் இல்லை. ஆகவே என்மேல் இரங்கி உன் கீத பலத்தில் பாதியாகிலும் கொடு. அல்லது கால்பாகமோ அரைக்கால் பாகமோ அளித்தாலும் போதும். அதுவும் இல்லையேல் ஒரு கீதத்தின் பலனையாவது கொடுத்து என்னைக் காப்பாற்று. ஏழையின்மேல் க்ருபை புரிவது மஹான்களின் ஸ்வபாவம்" என்றது.

நம்பாடுவான் கண்களில் கருணைமழை பொழிகிறது. அவனை அன்புடன் நோக்கி, " அப்பா! வாஸ்தவம். உன் க்ரூர ஜந்மத்தைக் கண்டு என் மனம் கரைந்து உருகுகிறது. நான் என்ன செய்வேன்? 'பலத்தில் ஆசையில்லாமல் பகவத் ப்ரீதியாகப் பாடிய கீதத்தின் பயனை உனக்கு எவ்விதம் அளிப்பது?' என்று ஏங்குறேன்" என்று கூறுமளவில், திடீரென்று ஒரு சிறந்த எண்ணம் அவன் மனத்தில் உதித்தது. " அப்பா! உனக்கு நல்ல காலம். உன் சாபம் நிவர்த்தியாக ஒரு யோசனை தோன்றியது. நான் காநத்தின் முடிவில் 'கைசிகம்' என்னும் ஒரு பண் பாடினேன். அது பசுக்கள் ப்ராஹ்மணர் முதலானவர்களின் யோகக்ஷேமத்தின்பொருட்டுப் பகவானை வேண்டிப் பாடிய மங்களம். அதன் பயனை உனக்குக் கொடுக்கிறேன். அப்பாட்டின் பெருமையினால் இந்நீச ஜந்மத்திலிருந்து விடுதலை யடையக்கடவாய் " என்றான். இவ் வமுத மொழியைக் கேட்பதுதான் தாமதம்- ப்ரம்ஹரக்ஷஸ்ஸின் ஆநந்தமும் நன்றியும் கூறத் தரமல்ல. காநசிகாமணியின் காலில் விழுந்து வணங்கியது. "அப்பா! உன் காநத்தின் மஹிமையும் பெருமையும் அபரிமிதம். உன் எல்லையற்ற கருணையினால் நான் சாப விமோசநம் அடைந்தேன் " என்று கூறி மறைந்தது.

" வஸுமதீ! ஆச்சர்ய காட்சியைக் கண்டு களித்தா யல்லவா? பக்தி மலர்ந்து காநரூபமாய் வெளிவருகிறது. அதன் ப்ரபாவம் எல்லையற்ற தென்பதை, நாரத பகவானும் வீணையும் கையுமாய் விளக்கிக் காட்டுகிறார் அல்லவா? என்னை இன்னிசையால் இன்புறச் செய்பவன்தான் பவ ஸாகரத்தினின்று

கரையேறுவான். அன்றியும் அவன் தன்னை அடுத்தவர்களையும் கரையேற்றுகிறான். இதற்கு இவனே அத்தாக்ஷி" என்றார் வராஹ நயினார் பூமிப் பிராட்டியைப் பார்த்து. அப்போது பூமிதேவி, "ப்ரபோ! நான் தங்யை யானேன். இக்காநத்தின் ப்ரபாவத்தை உலக மெங்கும் பரவச்செய்ய விரும்புகிறேன். ஆதலால் நான் பூலோகத்தில் பிறந்து அதை அநுஷ்டித்துக்காட்ட விரும்புகிறேன். தேவரீருக்குப் பாமாலை பூமாலை இரண்டும் சாத்த அத்யந்தம் ஆவல்கொண்டுள்ளேன். ஸ்வாமி! ஸங்கல்பித்தால் அடியேன் இச்சை நிறைவேறும். அநுக்ரஹிக்க வேண்டுகிறேன்" என்றாள். பெருமாள், "தேவி! உன் புத்திக்கும் ஸாமர்த்யத்துக்கும் தக்க யோசனையே செய்தாய். உன்னுடைய அளவற்ற கருணை என்னை உலகத்தில் அவதரிக்கும்படி தூண்டுகிறது. உலகத்தில் ஒரு நல்வழி காட்டும் ஆசார்ய ஸ்தாநத்தில் இருந்து அத்யந்தம் கீர்த்தியுடன் விளங்கப் போகிறாய்" என்றார்.

பெரியாழ்வார் திருமுகத்தில் அளவற்ற ஆநந்தம பொங்கியது. சித்திரப் பதுமைபோல் தன் திருமகளின் இன்பக் கனவை ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். "என்ன பாக்யம்! என்ன பாக்யம்!! கருணைக்கடல் வஸுமதியோ அடியேன் செல்வத் திருமகளாய் வந்துதித்தாள். நான் ஊஹித்தது உண்மை. தேவீ! என் தாயே! என்ன உன் வரையற்ற பொறுமை; கரையற்ற கருணை; அளவற்ற ஔதார்யம்; எல்லையற்ற வாத்ஸல்யம்; நீ ஒருத்தியாய் எம்பெருமானை அநுபவிப்பது ரஸமில்லை என்று, ஐம்பது லக்ஷம் தோழிமார்களுடன் சேர்ந்து காளமேகம்போல் காநமழை பொழிகிறாய். பாற்கடலில் பையத் துயின்ற பரமனடி பாடிப் பகவத் கைங்கர்ய ரஸத்தைப் புகட்டுகிறாய். எம்பெருமான் திருநாமம் உட்கொண்ட திருமந்த்ரம் செய்யும் நன்மை அவனாலும் செய்ய இயலாது. ஒருவனுக்குப் பாம்பு கடித்தால் கருடமந்த்ரம் ஜபித்தால் அவன் விஷம் இறங்கிக் குண மடைகிறான். அம்மந்த்ரத்துக்குரிய தேவதையாகிய கருடனை எதிரில் கொண்டுவந்து நிறுத்தினால் விஷம் இறங்க வகையுண்டோ? ஆகவே ஸ்ரீ ஆண்டாளாய், ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி, ஸம்ஸாரமாகிற விஷக் கடியினால் வருந்தும் ஜீவாத்மாக்களுடைய நோயை நீக்கி அருள்கிறாய். என் அப்பன், மணிவண்ணன், கண்ணபிரான் ஒருவனே உன் ரூப லாவண்யத்துக்கும் ஞானம் பக்தி முதலிய கல்யாண குணங்களுக்கும் ஏற்ற தனி நாயகன்" என்றிவ்விதம் எண்ணமிடுகிறார்.

ஸ்ரீ ஆண்டாள் நித்திரை கலைந்து எழுந்திருந்தாள். தந்தையின் கண்களில் ஆநந்த பாஷ்பம் பெருகுவதைக் கண்டாள். அவள் உள்ளப் பூரிப்பு கூறத் தரமல்ல. உடனே எதிரில் நிற்கும் பிதாவை வணங்கினாள். "அப்பா! சாந்தமே உருவெடுத்த தேவரீரோ கவலைக்கடலில் ஆழ்ந்து தத்தளிக்கத் தக்கவர். தேவரீர் சிந்தயில் தேர்ந்தெடுத்த மணமகப் பிள்ளை அரங்கனே வந்து என் கைத்தலம் பற்றுவர். அதில் என்ன ஸந்தேஹம்?

" பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமில்லாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசி யிருப்பனகள் பேர்க்கவும் பேராவே."

" ஞானப்பிரான் அன்று எனக்களித்த வாக்குறுதியை இன்று அவச்யம் நிறைவேற்றுவான். அந்தணர் யாகத்தில் தேவர்களின் பொருட்டுக் கொடுக்கும் ஹவிர்ப்பாகத்தைக் கானகத்தில் திரியும் ஒரு நரி வந்து முகரவும் யோக்யதை உண்டோ? பகவத் தாஸ்யமாகிற செல்வத்தை அநுபவிக்கும் அத்ருஷ்டம் புரிந்தவர்கள், தன்னுடன் ஒரே சங்கலியில் கட்டுப்பட்டிருக்கும் மற்றைச் சேதநர்களை நெஞ்சினால் தான் நினைப்பரோ? தந்தையே! 'மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன்' 'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்னும் புருஷோத்தமன் உபதேச மொழியை உலகத்துக்கு ஆசரித்து காட்டுகிறேன்" என்றாள்.

பெரியாழ்வார் ஆநந்தத்திற்கு எல்லையே இல்லை. 'அணியரங்கனே என் செல்வ மணமகப் பிள்ளை!' என்று தன் செல்வத் திருமகளைத் தழுவி அணைத்தார்.

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஸ்ரீ அழகியசிங்கர்களின் மஹோத்ஸவங்கள்

நிகழும் பார்த்திவ ஷு மார்கழி மீ 16உ (30—12—45) 40-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம் சாற்றுமுறை ஸம்பாவனைகளெல்லாம் முந்திய வர்ஷங்களைக்காட்டில் விசேஷமாக நடைபெற்றன. 17உ த்வாதசியன்று ததீயாராதநமும் நடந்தது. ஷை மீ 25உ (8—1—46) 41-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரமும், தை மீ 3உ (16—1—46) 38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரமும், 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கிற இதாநீம் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்ரமும், ஒவ்வொன்றிலும் மத்யாநம் சாற்றுமுறை ஸம்பாவனை ததீயாராதநங்கள் விசேஷப்படியாக நடந்தன. ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களை ப்ரார்த்தித்துக்கொண்டபடி, அவர்கள் ஷை நாலு திருநக்ஷத்ரங்களிலும் ராத்ரி டோலோத்ஸவங்களையும் அதி விமர்சையாக நடத்தினார்கள்.

* * *

பார்த்திவ ஷு மார்கழி மீ 24உ (7—1—'46) முதல் நடந்த ஸ்ரீ ஆண்டாள் நீராட்ட உத்ஸவத்தில் ஏழுநாளும் வழக்கம்போல் ததீயாராதனம் நடந்தது. எட்டாவது உத்ஸவம் (14—1—46) தை ஸங்கராந்தி யன்றும், மறுநாள் (15—1—46) கனு உத்ஸவத்தன்றும், உத்ஸவத்துக்கு வந்திருந்த M. D. Bros. ஸ்ரீ சக்ரவர்த்தி ஐயங்கார் ஸ்வாமியால் தேசாந்திரிகளுக்கு ரூ. 60-க்கு மேல் செலவழித்து நடத்தப்பட்டது. ப்ரதி வருஷம் இதேமாதிரி நடத்திவைக்கவேணுமாய் ஷை ஸ்ரீ சக்ரவர்த்தி ஐயங்கார் ஸ்வாமியை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மூலமாய் ஸவிநயம் ப்ரார்த்திக்கிறேன்.

R. சேஷய்யங்கார்.

2

கல்கத்தாவில் ஸ்ரீ அழகியசிங்கருடைய வார்ஷிக திருநக்ஷத்ர மஹோத்ஸவம்

“ நீரும் நம்மை ஆராதித்துக்கொண்டு ப்ரதி க்ராம நகரங்கள் தோறும் ஸஞ்சரித்து ஆச்ரித ஜனங்களுக்குத் திருவிலச்சினை மந்த்ர மந்த்ரார்த்த ப்ரதிபாதானம் பரந்யாஸம் முதலான உஜ்ஜீவனோபாயங்களைச் செய்துக்கொண்டு ஆழ்வார் எம்பெருமானர் நிகமாந்த மஹாதேசிகன் முதலானவர்களாலே ப்ரதிஷ்டாபிதமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைத் தழைக்கும்படி நிர்வஹித்துக்கொண்டுவாரும்'' என்ற ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய நியமனத்தை இன்றைக்கும் சிரஸா வஹித்து அநுஷ்டித்துவரும் ஸ்ரீ அஹோபில மடம் திவ்யாஸ்தானத்தில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்ய பாதுகாஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தைச் சென்ற தை மீ 19உ (1—2—46) முதல் 21உ (3—2—46) பர்யந்தம் ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களும் மற்றுமுள்ள பக்தர்களும் ஒன்றுகூடி அதிவிமர்சையாகக் கொண்டாடி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடையவும் ஸ்ரீ அழகியசிங்கருடையவும் க்ருபைக்குப் பாத்ரமானர்கள்.

வாங்கல் ந. நாராயண தாஸன்.

3

ஸ்ரீ கல்யாணபிவர்த்திநீ ஸபை, மதுராந்தகம்

27—11—45 அன்று, மேற்படி ஸபையின் கூட்டமானது ஸ்ரீ அஹோபில மடம் ஸம்ஸ்க்ருத கலாசாலையின் ப்ரார்த்தனா மண்டபத்தில் கலாசாலை மீமாம்ஸா அத்யாபகர் ஸ்ரீமான் S. கோபாலாசார்யர் தலைமையில் கூடிற்று. அப்போது ந்யாயசிரோமணி வகுப்பில் உள்ள N. வெங்கடவராஹன் என்னும் வித்யார்த்தி ‘ஸுநூ॥வி_உரகஸ வயூ- நாஉ கஷூ’ என்னும் விஷயத்தைப்பற்றி வடமொழியில் மிகவும் நன்கு உபந்யஸித்தார். மற்ற மாணவர்களும் தொடர்ந்து பேசினர். பிறகு தலைவரின் அழகிய முடிவுரையுடன் மங்கள கீதத்துடன் ஸபை இனிது கலைந்தது.

5—12—45ல் மேற்படி ஸபையின் கூட்டமானது, கலாசாலை ந்யாயாத்யாபகர் ஸ்ரீமான் V.D.ஸம்பத்குமார வரதாசாரியஸ்வாமி தலைமையின்கீழ்க் கூடிற்று. அப்பொழுது மேற்படி ஸபையின் கார்யதர்சி S. வரதாசாரியர் என்னும் மாணவனால் ‘ வஉா ஜாஸஃ ’ என்னும் விஷயம் பேசப்பட்டது.

18-12-45 அன்று, ஷை ஸபையில் கலாசாலை வ்யாகரணாத்யாபகர் ஸ்ரீமான் N.வரதராஜ அய்யங்கார் ஸ்வாமி தலைமையில் ந்யாயசிரோமணி வித்யார்த்தி T. ஸ்ரீநிவாஸன் என்பவர் ‘க்ஷணஶஃ கணஶஶ்சைவ விஜ்யாஉயஜ்ஃ அ ஸாயயெக॥’ என்பதைப்பற்றிப் பேசினர்.

26—12—45 அன்று, கலாசாலை ஆங்கில உபாத்யாயர் தலைமையின்கீழ்க் கூடின ஷை ஸபையில், அட்வான்ஸ் 2-ல் மாணவராக இருக்கும் M. V. லக்ஷ்மீ நரஸிம்ஹன் என்னும் மாணவரால் “ஜீவகாருண்யம்'' என்னும் விஷயம் தமிழில் பேசப்பட்டு, மங்களத்துடன் ஸபை இனிது கலைந்தது.

S. வரதாசாரியர்,
ஸெக்ரிடரி.

4

௸ ஸபையானது மார்ச் ௴ 2௳ சனிக்கிழமை பகல் 4½ மணிக்குக் கலாசாலை ப்ரார்த்தநா மண்டபத்தில் ஸ்ரீ.உ.வே ப்ரின்ஸிபால் T. ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி (M.A., L.T.) யின் அத்யக்ஷத்தில் கூடியது. மங்களாசரணத்தின் பிறகு, ஸ்ரீ.உ.வே. அத்யக்ஷ ஸ்வாமியானவர், ஸ்ரீமாலோல வித்வத் ஸதஸ்ஸில் அந்வயித்து எழுந்தருளியிருந்தவராயும், இக்கலாசாலை ஸ்தாபகரும் ஸ்ரீமதஹோபில மடாஸ்தாந வித்வத் ஸிம்ஹாஸனராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீ நருஸிம்ஹ திவ்ய பாதுகா ஸேவக ஸ்ரீவண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகனால் ஸ்ரீ திவ்யாஜ்ஞையாய் ஸதஸ்ஸில் அளிக்கப்பட்ட வேதாந்தப்ரவர்த்தக விருதை உடையவராயும், ந்யாயாத்யாபகருமான ஸ்ரீ. உ. வே. நாராயணாசார்ய ஸ்வாமியை மாலை முதலியவைகளால் ஸத்கரித்துத் தம்முடைய ஸந்தோஷத்தை வெளிப்படுத்தினர். பிறகு ௸ ஸபையின் கார்யதர்சியினால் ஸ்ரீ.உ.வே. நாராயணாசார்ய ஸ்வாமியின் பொருட்டு ஸ்வாகத பத்ரிகையானது ஸமர்ப்பிக்கப்பட்டது. அப்பொழுது வஸ்த்ரமான ஸம்பாவநா பத்ரிகைகளும் ஸமர்ப்பிக்கப்பட்டன. ஸ்ரீ.உ.வே. நாராயணாசார்ய ஸ்வாமியும் தம்மைக் கௌரவித்த விஷயத்தைக் குறித்து ஸ்வக்ருதஜ்ஞதையைத் தெரிவித்தார்.

அதே ஸமயத்தில் ப்ரவேசநீய கக்ஷ்யையிலிருக்கும் M. ஸ்ரீநிவாஸன் என்னும் வித்யார்த்தியினால் 'மைத்ரீ' என்னும் விஷயமானது உபந்யஸிக்கப்பட்டது. பிறகு ஸ்ரீ.உ.வே. அத்யக்ஷ ஸ்வாமியானவர் உபந்யஸித்த விஷயத்திலுள்ள குணதோஷங்களை விவரித்து, ௸ விஷயத்தை வித்யார்த்திகளின் பொருட்டு இனிது உபந்யஸித்தார். மங்களாநந்தரம் ஸபை இனிது முடிவுற்றது.

௸ ஸபையானது மார்ச் 14-௳ பகல் 2½ மணிக்கு ஸ்ரீஸந்நிதி ஸ்ரீகார்ய பதவீ நிர்வாஹகராயும், ஸ்ரீமதாண்டவன் வித்யாப்ரவர்த்தகருமான ஸ்ரீ.உ.வே. ஜோ. ரங்காசார்ய ஸ்வாமியின் அத்யக்ஷத்தில் கூடியது. ௸ ஸபையில் உபந்யாஸம் செய்வதற்காக ஸ்ரீ.உ.வே. உபந்யாஸ ரத்நம் ஸ்ரீரங்கம் சடகோபாசார்ய ஸ்வாமி எள்ளியிருந்தார். இரண்டு ஸ்வாமிகளின் பொருட்டும் ஸ்வாகத பத்ரிகையானது ஸபாத்வாரா ஸமர்ப்பிக்கப்பட்டது. ஸ்ரீ.உ.வே. ஸ்ரீகார்யம் ஸ்வாமி உபந்யாஸத்தில், ஸ்ரீ அழகிய சிங்கரின் அவதார விசேஷத்தையும், நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்பதையும் பற்றி வித்யார்த்திகளுக்கு நன்கு போதித்தார். பிறகு உபந்யாஸ ரத்நம் ஸ்ரீ.உ.வே. சடகோபாசார்ய ஸ்வாமி நன்கு உபந்யாஸம் செய்து வித்யார்த்திகளையும் ஸபாஸதர்களையும் களிப்புறச் செய்தார். மங்களாநந்தரம் ஸபை இனிது முடிவுற்றது.

கலாசாலை,
மதுராந்தகம்,
23—3—46.

P. C. வரதாசாரி.
கார்யதர்சி.

5

ஸ்ரீ கருடபுரம் ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் ப்ருந்தாவநமும் வார்ஷிகாராதநமும்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீநிவாஸ மஹாதேசிகன் (ஸ்ரீ கருடபுரம் ஸ்வாமி) ஸ்ரீ காஞ்சீ திவ்ய க்ஷேத்ரத்தில் பேரருளாளன் திருவடிவாரத்தில் ஸ்ரீமத் பரமபரி... கேதாண்டிப்பட்டி ஸ்வாமி ஆசிரமத்தில் சுமார் 14 ஸம்வத்ஸரங்களாக எழுந்தருளியிருந்து, ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் ப்ரவர்த்திப்பித்த ஸத்ஸம்ப்ரதாயத்தை நிர்வஹித்துக்கொண்டு பல சேதநர்களை உஜ்ஜீவிப்பித்து, சென்ற சித்திரை மாதத்தில் திருநாட்டுக்கெழுந்தருளியது ஸ்ரீ வைஷ்ணவ லோக மறிந்த விஷயம். அந்த ஸ்வாமியின் ப்ருந்தாவனமும் அந்த ஆசிரமத்தின் ஸமீபத்தில் ஸ்ரீ கேதாண்டிபட்டி ஸ்வாமியின் ப்ருந்தாவநத்தின் பக்கத்தில், நிகழும் பார்த்திவ ஸ்ரீ மாசி மாதத்தில், ஸகிந்திராபாத் ஸ்ரீமான் ராம ஸ்வாமி அய்யங்காரின் தர்ம பத்னியான ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாளால் சுமார் ரூ. 1000 செலவழித்து நிர்மாணம் செய்யப்பட்டு, ஸ்ரீ ஸ்வாமியின் சிலாவிக்ரஹமும் ஸ்தாபிக்கப்பட்டு, மூன்று நாள் வேதபாராயணம் திவ்யப்ரபந்த ஸேவாகாலம் முதலியவற்றோடு திருப்ரதிஷ்டையும் ஸமீபத்தில் நடந்தேறியது. அந்த ஸமயம் ஸ்ரீ ஸ்வாமி திருவடியான திருவஹீந்த்திரபுரம் ஸ்ரீ உப. தி. ஈ. சடகோபாசார்யர் முதலியவர்களும், அந்த ஸ்ரீ காஞ்சீ திவ்ய க்ஷேத்திரத்திலுள்ள அநேக ஸ்ரீ வைஷ்ணவ மஹான்களும் எழுந்தருளியிருந்ததோடு, ஸ்ரீமத் ஸ்வாமியின் குமாரர்களும் வந்திருந்தார்கள். மஹோத்ஸவமும் வெகு விமரிசையாக நடந்தது. வேதபாராயணம் முதலிய கைங்கர்யங்களில் அந்வயித்தவர்கட்கும், ஸ்ரீ ஸ்வாமி குமாரர்கட்கும், ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாளால் யதோசிதம் ஸம்மானமும் செய்யப்பட்டது. உபய விபூதியோடு பரப்ரஹ்மத்தை அநுபவித்து மஹாநந்தத்தைப் பெறும்படியாக மஹோபகாரம்செய்த ஸதாசார்யன் விஷயத்தில் பக்தியோடு சக்திக்குத் தகுந்தபடி கைங்கர்யம் செய்ய நேர்ந்ததும் பெரிய அதிர்ஷ்டம்தான்.

நிற்ச: ஷை ஸ்ரீமத் கருடபுரம் ஸ்வாமியின் வார்ஷிக ஆராதனம் அடுத்த வ்யய ஸ்ரீ சித்திரை மீ 6வ (18—4—46) வியாழக்கிழமை ஸ்ரீ ஸ்வாமி ப்ருந்தாவனத்தின் பக்கத்தில் ஸ்ரீ ஸ்வாமி ஆசிரமத்தில் 10 தினம் முந்தி 9—4—46 முதல் வேதபாராயணம் திவ்ய ப்ரபந்தஸேவை முதலியவைகளுடன் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படப்போகிறது. கடைசி நாள் ஸ்ரீ ஸ்வாமி குமாரர்களைக்கொண்டு ஸம்வத்ஸராராதநமும் ஆசிரமத்தில் நடக்கப் போகிறது. அதற்கும் ஷை ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாள் அதிகமான ஸஹாயம் செய்கிறதாகத் தெரிகிறது. ஷை ஸம்வத்ஸராராதநத்தில் ஸ்ரீ ஸ்வாமி திருவடிகள் யதோசிதம் அந்வயித்து க்ருதார்த்தர்களாவதோடு, மற்ற ஸ்வாமிகளும் எழுந்தருளி ஷை மஹோத்ஸவத்தைப் பூர்த்தி செய்யவேணுமென்று ப்ரதீக்ஷிக்கப்படுகிறது.

கூத்தபாக்கம் லக்ஷ்மி நரஸிம்ஹாசார்யர்.

6

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழூந்தூர்

ஏற்கெனவே ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா பத்ரிகையில் விஜ்ஞாபித்துக்கொண்டபடி இம்மாதத்திய கூட்டத்தை நடத்த முடியாதபடி சில ஸௌகர்யக் குறைவுகள் ஏற்பட்டுவிட்டபடியால், ஆஸ்திகர்கள் எல்லோரும் ஷை தவறுதலுக்குப் பொறுத்துக்கொள்ள வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

நிற்க : நாளைச் சித்திரை மீ 2-ம் தேதியுடன் ஷை ஸபை ஆரம்பமாகி ஆறுமாத காலமாகிறது. ஷை ஸபையின் அரை வருஷக் கொண்டாட்டத்தைப் பெரிய வித்வான்களைக்கொண்டு மிகவும் அழகான முறையில் நடத்துவதற்கு ஷை ஸபையோரும் உள்ளூர்

வாஸிகளும் முயற்சி செய்துகொண்டு வருகிறார்கள், தவிர: கீதா பிரஸ் மானேஜர் கோரக்பூரிலிருந்து மேற்படி ஸபைக்காகவே இலவசமாக 12 ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்ரீ கோசங்கள் அனுப்பினதோடு, மேற்படி ஸபா விஷயமாய் அனுப்பின ஆசிச் செய்தியையும் ஆஸ்திக மஹான்களுக்கு விஜ்ஞாபித்துக்கொள்கிறேன்.

தவிரவும்: ஏற்கனவே மேற்படி ஸபையின் மூன்ருவது கூட்டத்திற்குத் தலைமை வஹித்த ஸ்ரீ. உ.வே. T. A. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமியினால் கீழ்க்கண்ட ஸமாசாரங்கள் ப்ரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீ. உ.வே. T. S. கிருஷ்ணமாசார்யர் ஸ்வாமியினால் ஆமோதிக்கப்பட்டு, கூட்டத்திற்கு வந்திருந்த ஸ்வாமிகளால் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டன. அவை பின்வருமாறு:—

பெரியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் உபயோகப்படும் முறையில் பக்திமார்க்கமான புஸ்தகங்களை வெளிகளில் வ்யாபரித்து வாங்கி, ஒரு புஸ்தகாலயம் ஏற்படுத்துதல். சிறுவர்களான வித்யார்த்திகளுக்கு வைதிகஸம்பந்தமான புருஷ ஸூக்தாதிகள் உபநிஷத்துக்கள் ஸ்ரீ தேசிகன் ஸ்தோத்ரபாடங்கள் முதலியவைகளையும், உபயோக்தமான திவ்ய ப்ரபந்தாதிகள் முதலியவைகளையும் ஸந்தை சொல்லிவைத்தல், குழந்தைகளுக்கு ஸம்ஸ்க்ருதம் ஹிந்தி முதலியன கற்பித்தல், மேற்படி வைதிக விஷயங்களில் வித்யார்த்திகளுக்கு ச்ரத்தையும் ஊக்கமும் ஸந்தோஷமும் உண்டாகும்படி மாதந்தோறும் பரிக்ஷைகள் நடத்தி ஸம்மானங்கள் கொடுத்தல் முதலியன. ஷை கார்யங்களை நிரந்தரமாக நடத்திக்கொண்டு வருவதற்குப் போதுமான நிதி யில்லாமையால் தாமதப்படுகிற தென்றும், ஆகையால் வெளியூர்களில் உள்ள ஆஸ்திகர்களிடத்திலும் மடாதிபதிகளிடத்திலும் த்ரவ்ய ஸஹாயமும், நூல் நிலயத்திற்குப் பக்திமார்க்கமான புஸ்தகங்களும் கேட்டு வாங்கி நடத்த வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டன.

ஹைதராபாத்திலிருந்து நமது ஸபா விஷயமாய் ஸ்ரீமத் வேதமார்க்கேத்யாதி பிருதாலங்க்ருத இதாநீம் ஸ்ரீமத் அழகியசிங்கரிடமிருந்து அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீமுக பத்ரிகை விபரம் :— "ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபாவின் நோக்கங்களும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம் நன்கு நடந்து வருவதும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்திற்கு விஶதமாயின. ஷை ஸபையானது உலகத்தில் பெரும் கீர்த்தியுடன் என்றும் சாச்வதமாக நடந்து வருவதற்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் அனுக்ரஹிப்பான் என்பதில் ஸந்தேஹமில்லை.........". விரிவாக அனுக்ரஹிக்கப்பட்ட மற்றும் பல விஷயங்கள் ஷை ஸபையில் வாசிக்கப்பட்டன. தாஸவர்க்கங்களாகிய அடியோங்கள் ஆனந்தக் கடலில்மூழ்கினேம். ஷை ஸபை ஸம்பந்தமாக ஒரு வேண்டுகோள்:—

ஆஸ்திகர்கள் எல்லோரும் ஷை ஸபைக்குத் தம் சக்தியானுஸாரம் த்ரவ்ய ஸஹாயம் செய்யக் கூடியவர்களும், நூல் நிலயத்திற்குப் பக்திமார்க்மான ஸ்ரீமத் ராமாயணம், பாகவதம், பாரதம், திவ்யப்ரபந்த வ்யாக்யானங்கள், கீதாபாஷ்யம் போன்றுள்ள புஸ்தகங்களாக அனுப்பக்கூடியவர்களும், "பொக்கிஷதார் அல்லது காரியதரிசி, ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபா, தேரழுந்தூர், தேரழுந்தூர் போஸ்டு, (வயா) குத்தாலம்" என்னும் விலாஸத்திற்கு அனுப்பி உதவிபுரிய வேணுமாய் ப்ரணமபூர்வகமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

கிடாம்பி R. நரஸிம்ம தாஸன்,
காரியதரிசி.

7

டாக்டர் N. C. அய்யங்காரால் வழங்கப்படும்

ஸ்ரீமதி ருக்மிணி அம்மாள் எண்டௌமெண்ட் பரிசு

பார்த்திவ ஸு மாசி மீ 29 உ [12—3—'46] நைஸாம் ஸ்டேட் வாரங்கலில் தற்காலம் ஸஞ்சாரமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீ அஹோபில மடம் ஸமஸ்க்ருத காலேஜின் ஸ்தாபகராயும் நிர்வாஹகராயும் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ வண் சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஸந்நிதிக்கு வாரங்கல் டாக்டர் நரஸிம்ஹ சென்னகேசவாசார்யர் தண்டன் ஸமர்ப்பித்த விஜ்ஞாபநம்.

ஸ்ரீ மதுராந்தகம் ஸமஸ்க்ருத கலாசாலையில் சிரோமணி பைனல் (Final) பரிக்ஷையில் ப்ரதி வர்ஷமும், ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் உகக்கும்படியாக முதலில் தேறிய இரண்டு வித்யார்த்திகளுக்கு, என் தாயார் ஸ்ரீமதி ருக்மிணி யம்மாளின் ஞாபகார்த்தமாகப் பரிசு அளிப்பதற்காக ரூ. 2000 (இரண்டாயிரம்) மூலதநம் ஏற்படுத்துகிறேன். இந்த மூலதநம் டெல்லி பாரத பாங்க் லிமிடெட் 35315 முதல் 35334 வரையிலுள்ள இருபது நூறு ரூபாய் பிரிபரன்ஸ் ஷேர்களின் ஸர்டிபிகேட் நம்பர் P. 1531-ல் இருக்கிறது. இதை ஸ்ரீ அழகியசிங்கர் ஸந்நிதிக்கு இன்று டிரான்ஸ்பர் செய்கிறேன். ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸர்வ ஸ்வதந்த்ரமும் இந்த ஷேரின்மேல் உண்டாக ஸம்மதிக்கிறேன்

மேற்படி மூலதநத்தில் ப்ரதி வர்ஷ வருமானத்தைக் கீழே குறிப்பிட்டிருக்கும் விவரப்படி உபயோகிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன். விதிகள்:— டிவிடண்ட் வருமானத்தில் 60% ஐ முதல் பரிசாகவும், 40% ஐ இரண்டாவது பரிசாகவும், புஸ்தக ரூபமாகவோ அல்லது ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளப் படியோ கொடுக்க ஸம்மதிக்கிறேன்.

இது, என் தாயார் ஸ்ரீமதி ருக்மிணி யம்மாள் ஞாபகார்த்தமாகக் கொடுக்கப்படுவதால், "டாக்டர். N. C. அய்யங்காரால், வழங்கப்படும் ஸ்ரீமதி ருக்மிணி யம்மாள் எண்டௌமெண்ட் பரிசு" என்பது தலையங்கம் எழுதவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

ப்ரதி வர்ஷமும் பரிசளிப்பு விழாவை அடியேனுக்குத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். பரிசுகள் அளிக்கும் மற்ற விவரங்களையும் நிபந்தனைகளையும் ஸ்ரீ அழகியசிங்கர், தமது திருவுள்ளப்படியே நடத்திக்கொள்ள வேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்.

டாக்டர் நரஸிம்ஹ சென்னகேசவாசார்யர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

யோऽந்த: ப்ரவிஶ்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலஶக்திதர: ஸ்வதாம்நா ।
அந்யாம்ஶ்ச ஹஸ்தசரண ஶ்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அழகிய சிங்கர் உத்தர தேஶம் யாத்ரை செய்யவேண்டு மென்னும் திருவுள்ளத்துடன் ஹைதராபாத் பர்யந்தம் எழுந்தருளி, அவ்விடத்திற் சில திநங்கள் அங்குள்ள ந்ருஸிம்ஹ பக்தர்களால் ஆராதிக்கப்பட்டு, பிறகு அவ்விடமிருந்து

ஸ்ரீ அழகியசிங்கருடைய யாத்ரோத்ஸவம்.

பம்பாய் ராஜதாநிக்கு யாத்ரையாக ஸம்விதாநம் செய்துவர ப்ரயத்நித்தபொழுது, ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸங்கல்பம் அந்யதாவாக இருப்பதாகத் தெரிய வந்ததால் அந்த ப்ரயாணம் இப்பொழுது வேண்டா மென்று நிறுத்தப் பட்டது. “அந்யதா ஹ்யந்யதா ஸஞ்சயதி ஶ்வோऽஹம் விதியாத்ய ஹி” என்பதன்றோ வஸ்து ஸ்திதி? இப்பொழுது ஹைதராபாத்தை விட்டுப் புறப்பட்டு வாராங்கல் பெஜவாடா மார்க்கமாக ஓங்கோல் எழுந்தருளியிருப்பதாக அறிகிறோம். இன்னும் ஸ்வல்ப திநங்களுக்குள்ளாகத் திருப்பதிக்கு எழுந்தருளும்படியாக இருக்கும்.

*　　　　*　　　　*

ஸ்ரீ அழகியசிங்கர் வாராங்கலில் எழுந்தருளியிருக்கும் காலத்தில், அவ்விடத்தில் மஹாஜநங்களுக்கு பைஷஜ்யமாகிற மஹோபகாரத்தைச் செய்து

ஒரு நன்கொடை

கொண்டுவரும் டாக்டர் ஸ்ரீ. உப. நரஸிம்ஹ சென்ன கேஶவாசார்யர் என்னும் ஒரு பக்தாக்ரேஸரர், ஸ்ரீமதுராந்தகம் ஸம்ஸ்க்ருத கலாஶாலையில் ஶிரோமணி பரீக்ஷையில் உத்தீர்ணராக வரும் முதல் இரண்டு வித்யார்த்திகளுக்குப் பரிசு கொடுப்பதற்காக இரண்டாயிரம் ரூபாய் பாடஶாலைக்கு மூலதநமாக ஸமர்ப்பித்தார். இந்தத் தநத்திலிருந்து ப்ரதிவர்ஷம் வருமானமாகக் கிடைக்கும் த்ரவ்யத்தில் நூற்றுக்கு அறுபது பாகத்தை முதல் பரிசாகவும், நாற்பது பாகத்தை இரண்டாவது பரிசாகவும், தமது தாயார் ஸ்ரீமதி ருக்மிணி அம்மாள் பெயரால் புஸ்தக ரூபமாகக் கொடுக்கவேண்டுமென்பது அந்த ஸ்வாமியின் திருவுள்ளம். இந்த நன்கொடையை ஸ்ரீ அழகியசிங்கர் மிக்க த்ருப்தியுடன் திருவுள்ளம் பற்றியாயிற்று. பாடசாலையின் சார்பாக அந்த டாக்டர் ஸ்வாமிக்கு ஹார்த்தமான க்ருதஜ்ஞதையை நாமும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

*　　　　*　　　　*

நமது தேஶத்திற்குப் பாச்சாத்ய ராஜ்யம் ஏற்பட்டது முதலாக, நமது பாலர்களை நாம் ஜீவநோபாய லாபத்தை உத்தேஶித்து, அந்தப் பாச்சாத்ய பாஷையைப் பெரும்பாலும் பாச்சாத்யர்களைக் கொண்டே அப்யஸிப்பித்து வரு

கிறே மென்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்தப் பாஷையை அவ்விதம் அப்யஸிப்பிப்பதில், அந்தத் தேஶத்து ஜநங்களின் ஸம்ஸர்க்கம் பஹுப்ரகாரமாக ஸம்பவிக்கவே, அந்த ஸம்ஸர்க்கமடியாக நமது பாலர்களின் நடை உடை பாவனைகளும் மனோபாவங்களும் கொஞ்சம் கொஞ்சமாக மாறிக்கொண்டு வந்தன. "ஸம்ஸர்கஜா தோஷகுணா பவந்தி" என்பது மநுஷ்யர்களுடைய மனோ வ்ருத்தியை அறிந்தவர்களின் வாக்யம். ஆனல், ஸ்வல்ப காலமாக அந்த மாறுதல் கொஞ்சம் தடைப்பட்டு, நமது பாலர்களுக்கு நமது தர்மங்களிலும் நமது பண்டைக் காலத்து ஆசாரங்களிலும் ஒரு ருசி உண்டாவதை நாம் பார்க்கிறேம். பாச்சாத்ய பாஷா ஜ்ஞாநத்தைப் பூர்ணமாகப் பெற்று அதில் உத்தீர்ணராக இருக்குமவர்களுட் சிலர், நமது மஹர்ஷிகளாற் செய்யப்பட்டிருக்கும் தத்வோபதேஶங்களையும் நமது ஆசார்யர்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஸித்தாந்தங்களையும் அறிந்து கொள்ளவேண்டு மென்னும் ஆஸ்தையுடன் கூடியிருக்கிறர்கள். பல விடங்களில் ஆஸ்திக மஹான்களால் பண்டிதர்களைக் கொண்டு செய்விக்கப்படும் வேதாந்த உபந்யாஸங்களிலும் இச்சிறுவர்கள் ஒரு வித உத்ஸாஹத்துடன் கலந்துகொள்வதை நாம் பார்க்கிறேம். இம்மாதிரியான மாறுதல் ஸம்பவிப்பதற்கு ஹேது என்னவென்று விசாரிக்கப் புகுந்தால், பகவத் ஸங்கல்பமே ஹேது வென்று மாத்ரம் சொல்லவேண்டும். பகவான் இச்சித்தால் எது துஸ்ஸாத்யம்?

ஸ்ரீவிஶிஷ்டாத்வைத ஸபை, மதராஸ்.

இதற்கு நிதர்ஶநமாக, நாம் இந்தச் சென்னையில் நடைபெற்ற ஒரு ஸம்பவத்தைக் கூறத் துணிவோம். சற்றேறக்குறைய ஐந்து ஆறு மாஸங்களுக்கு முன் திருவல்லிக்கேணியில் "ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸபை" என்று ஒரு ஸபை ஏற்படுத்தப்பட்டது. நமது ஸித்தாந்தத்தில் அபரிமிதமான ச்ரத்தையை வஹித்து வரும் ஸ்ரீ. உ.வே. வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் அதைத் திறந்து வைத்தார். அப்பொழுது திவான் பஹதூர் ஸ்ரீ. உ. வே. பாஷ்யம் ஐயங்கார், ஆங்க்லம் படிக்கும் நமது சிறுவர்களுக்கு நமது ஸித்தாந்த விஷயத்தில் ஜநித்திருக்கும் ச்ரத்தையை ஆமோதித்து, அந்த ச்ரத்தை எங்கும் பரவி நமது தேஶத்திற்கு மாத்ரமின்றிக்கே, நமது லோகம் முழுவதற்குமே மஹத்தான க்ஷேமத்தைச் செய்யவேண்டு மென்னும் தமது மனோரதத்தை வெளியிட்டார். இப்பொழுது அந்த ஸபையில் நூற்றுக்கணக்காக ஸப்யர்கள் சேர்ந்திருப்பதாக நாம் அறிகிறேம். அந்த ஸப்யர்களுள் பெருந்தொகையார் நமது கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களே. அந்த ஸபையின் முக்ய நோக்கமானது, நமது ஆசார்யர்களாற் செய்யப்பட்டுள்ள தத்வ ஸம்பத்தமான ஸித்தாந்தத்தின் விஷயங்களை, ஆங்க்லம் படிக்கும் நமது சிறுவர்களுக்குத் தெளிவாகவும் யதாவஸ்திதமாகவும் விளக்கவேண்டும் என்பதே. இந்த நோக்கத்தை அநுஸரித்து ஸ்ரீ.உ.வே.வி.வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி 'ஸ்ரீவிஶிஷ்டாத்வைதத்தின் தத்வம்' என்னும் பெயருள்ள வ்யாஸ மொன்றைப் பின் வரப்போகும் வ்யாஸ பரம்பரைகளுக்கு முகவுரையாக இங்க்லீஷில் எழுதி ப்ரசுரம் செய்திருக்கிறர். இந்த ஸபையின் அங்கத்தினருள் ஒருவரான ஸ்ரீ. உ. வே. டி. ராமஸ்வாமி ஐயங்கார், ஸ்ரீ ஆண்டாள் அநுக்ரஹித்துள்ள திருப்பாவையை இங்க்லீஷில் மொழி பெயர்த்து அதை ஒரு புஸ்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறர்.

இன்னும் இம்மாதிரி பல க்ரந்தங்கள் நமது ஸித்தாந்த ஸம்பத்தமாக வெளிவருமென்று நாம் எதிர்பார்க்கிறோம். "வசஷ்ணேஷிண்யா யொஷித வைவ யவா நம் ஆதஸ்யேஆதஸ்யே" என்று ஸ்ரீ தேசிகன் அநுக்ரஹித்திருக்கும் ரீதியில் நாம் அநர்க்கமான இந்த விஷயத்தில் நமது சிறுவர்களை ஆகர்ஷிக்க வேண்டும். அப்படிச் செய்தால் நமது ஸித்தாந்தம் தழைத்து ஓங்குமென்பதில் ஆக்ஷேபமில்லை. நாம் கீழ்க் குறித்திருப்பது போலப் பாச்சாத்யர்களுடைய ஸம்ஸர்க்கத்தால் நமது சிறுவர்கள் தமது நடை உடை பாவனைகளில் சிற்சில மாறுட்டத்தை அடைந்திருக்கலாம். அது காரணமாக அவர்களைப் பரித்யஜிப்பது புத்திமத்க்ருத்யமாக மாட்டாதன்றோ?

இந்த ஸபையின் அபிவ்ருத்தியில் தீவ்ரமான அபிநிவேசத்தைச் செய்து, அதை நடத்திவரும் வ்யக்திகள் இரண்டு ரத்நங்களே. அவர்கள், திருவல்லிக்கேணி ஸ்ரீ. உப. கே. ஆர். ராமஸ்வாமி ஐயங்காருடைய புத்ரராகிய ஸ்ரீ. கே. ஆர். ராமாநுஜரும், வெண்பாக்கம் ஸ்ரீ. உப. தேசிகாசார்யருடைய புத்ரராகிய ஸ்ரீ. வி. டி. ராமஸ்வாமியுமே. அவர்கள் பூர்ணமாக ஆங்க்லம் படித்தவர்கள்; உயர்ந்த பதவியில் இருப்பவர்கள். அவர்களுக்கு இந்த விஷயத்தில் அளவற்ற உத்ஸாஹத்தை ஸ்ரீ சரண்யன் அநுக்ரஹித்திருக்கிறான். ஆங்க்லம் படித்த அடையாளங்கள் பாஹ்யத்தில் அவர்களிடம் ஸ்வல்பம் தென்பட்டாலும், ஆந்தரமாக அவர்களுடைய மநோபாவம் மிகவும் சுத்த மென்பதை நாம் அறிவோம். "க்ஷிப்ரம் ஹவதி யசஸ்தா" என்கிறபடி அவர்களுடைய வ்யவஸாயம் உறுதி பெற்றிருக்கிறபடியால், நமது ஆசாரங்களைச் சீக்ரத்தில் கைப்பற்றி வைதிகோத்தமர்களாக வருவாரென்று நாம் நம்புகிறோம்.

சென்ற சனிக்கிழமை திநம் (6—4—46) ஸ்ரீ அஹோபிலம் மடம் ஸம்ஸ்க்ருத பாடசாலையின் வார்ஷிக மஹோத்ஸவமும் ஸ்ரீ கல்யாணபிவர்த்தநீ ஸபையின் வார்ஷிகக் கொண்டாட்டமும் மதுராந்தகத்தில் பாடசாலைக் கட்டடத்தில் கொண்டாடப்பட்டன.

ஸ்ரீமதுராந்தகம் பாடசாலையின் வார்ஷிக உத்ஸவம்.

கொச்சின் ப்ரதான ஹைகோர்ட் ஜட்ஜாகிய ஸ்ரீ. உ. வே. கே. எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி அத்யக்ஷத்வத்தை வஹித்தார். அநேக ஆஸ்திகர்கள் எழுந்தருளியிருந்தனர். பகல் 3-மணிக்கு அத்யக்ஷ ஸ்வாமி மயிலாப்பூரிலிருந்து எழுந்தருளினவுடன், அந்த ஸ்வாமியை மடத்தில் வரவேற்றுப் பூர்ணகும்பம் ஸமர்ப்பித்து, அங்கிருந்து ஸ்வஸ்தி வாசநத்துடன் கலாசாலைக் கட்டடத்திற்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டுபோய், அவ்விடத்தில் 3½-மணிக்கு அன்று நடைபெறவேண்டிய உத்ஸவத்தை ஆரம்பித்தார்கள். ஆரம்பம் முதல் முடிவு பர்யந்தம் அந்த உத்ஸவம் யதாக்ரமம் நிர்விக்நமாக நடைபெற்றது. தேவனார்விளாகம் ஸ்ரீ. உ. வே. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யரும், தோட்டாலம் ஸ்ரீ. உ. வே. வேணுகோபாலாசார்யரும், தம்தமக்கு வ்யவஸ்திதங்களான உபந்யாஸங்களைச் செய்தருளினார்கள். அப்பொழுது அவ்விடத்தில் எழுந்தருளியிருந்த சீர்காழி ஸ்ரீ. உப. ஸுந்தராசார்ய ஸ்வாமியும் ஸப்யர்களால் ப்ரார்த்திக்கப்பட்டு, ரஸவத்தாகச் சில உத்தமமான உக்திகளைச் சொல்லி ஸப்யர்களை ஆநந்திப்பித்தார். வித்யார்த்திகளுள் சிலர் வாக்யார்த்தத்தில் அந்வயித்தார்கள்; சிலர் சில ச்லோகங்களை வாசோ விதேயமாக்கி ஒப்புவித்தார்கள்; சிலர் காநம் செய்தார்கள். முடிவில் ஸ்ரீ அத்யக்ஷர் அதிஹ்ருத்யமாகச் சில உபதேசங்களைச் செய்தார். பிறகு க்ருதஜ்ஞதாவிஷ்கரணம் செய்யவே ஸங்கம் முடிவுபெற்றது.

174220
-600 008

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 1946 மார்ச் மீத்திய சந்தா வஸூல்

			ரூ.	அ.
17	ஸ்ரீ. R. A. சேஷாத்ரி, மயிலாப்பூர்	....	3	0
26	,, V. V. ஐயங்கார், பம்பாய்	....	3	0
27	,, R. L. நாராயணன், கல்கத்தா	....	3	0
67	,, T. S. பிச்சு ஐயங்கார் திருக்குறுங்குடி	....	3	0
74	,, P. P. க்ருஷ்ணஸாமி ஐயங்கார், பங்களூர்	....	3	0
79	,, D. P. செல்லம் ஐயங்கார், விழுப்புரம்	....	3	0
90	,, C. V. ஜகந்நாதாச்சாரியர், ஸ்ரீரங்கம்	...	3	0
108	,, S. க்ருஷ்ணஸாமி ஐயங்கார், மயிலாப்பூர்	....	3	0
120	,, செல்லம்மாள், மயிலாப்பூர்	....	3	0
150	,, K. R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கோனேரிராஜபுரம்	...	6	0
178	,, C. V. ஜகன்னாதாச்சாரியர், கும்பகோணம்	....	3	0
192	,, S. நரஸிம்மன், கல்கத்தா	....	3	0
211	,, V. E. க்ருஷ்ணமாசாரியர், காஞ்சீபுரம்	...	3	0
214	,, S. ஸ்ரீநிவாஸகோபால ஐயங்கார், கபிஸ்தலம்	....	2	0
277	,, ரிஜிஸ்ட்ரார், அண்ணாமலை ஸர்வகலாசாலை,	....	3	0
433	,, வீ. ராமாநுஜதாதாசாரியர், N. குஜராத்	...	10	0
444	,, V. S. நரஸிம்மாசாரியர், நுங்கம்பாக்கம்	...	3	0
450	,, V. K. ஐயங்கார், இந்தூர்	....	3	0
466	,, P. ராகவாசாரியர், கோயமுத்தூர்	....	3	0
501	,, D. T. அநந்தாசாரியர், தாமல்	....	5	0
557	,, R சேஷ ஐயங்கார்,	....	9	0
583	,, சக்ரவர்த்தி ஐயங்கார், தி. நகர்	....	3	0
623	,, சேட்லூர். N. R. ராஜகோபாலாசாரியர், கோயமுத்தூர்		2	0
653	,, N. R. பார்த்தஸாரதி ஐயங்கார், சைதாப்பேட்டை	....	2	0
675	,, ஸுந்தரம் ஐயங்கார், கும்பகோணம்	....	2	0
702	,, K. S. ராகவாசாரி, மதராஸ்	....	1	0
703	,, V. V. நாராயணன், புது டில்லி	....	3	0
708	,, N. பார்த்தஸாரதி, மயிலாப்பூர்	....	3	0
709	,, T. V. ரங்கநாதன், சங்கம்	....	3	0
714	,, V. R. ரத்நம், ஸெகண்ட்ராபாத்	....	3	0
716	,, K. பத்மநாப ஐயங்கார், திருவநந்தபுரம்	....	3	0
717	,, S. S. கைலாஸம், கள்ளிக்கோட்டை	....	3	0
718	,, V. தேசிகாசாரியர், மயிலாப்பூர்	....	3	0

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீநரஸிம்ஹவரவரமுநயே நம:

விற்பனைக்குரிய ஸம்ப்ரதாய புஸ்தகங்கள்

1. ஸ்ரீ நஞ்ஜீயர் அருளிச்செய்த ஸ்ரீஸூக்த பாஷ்யமும்,
ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய சதுச்லோகீ,
ஸ்ரீஸ்தவம், ஸ்ரீகுணரத்நகோசம் முதலியனவும் ரூ. 1 8 0

2. அபயப்ரதாந ஸாரம்—
ஸ்ரீ நிகமாந்தமஹாதேசிகன் அருளிச்செய்தது ரூ. 0 8 0

3. ஷை Feather-weight paper ரூ. 1 0 0

4. ஸித்தாந்தத்ரய ஸங்க்ரஹம்—
ஸ்ரீ. உ. வே. கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி
அருளிச்செய்தது ரூ. 0 8 0

5. பதினெரு சில்லரை ரஹஸ்யங்கள்—
(முதல்பாகம்) ஸாரஸாரம் முதலியன. ஸ்ரீ நிகமாந்த
மஹாதேசிகன் அருளிச்செய்தவை ரூ. 1 8 0

6. பதினெரு சில்லரை ரஹஸ்யங்கள்—
(இரண்டாம் பாகம்) விரோதபரிஹாரம் முதலியன
வும், பரமபதஸோபாநமும், ஸ்ரீ நிகமாந்தமஹா
தேசிகன் அருளிச்செய்தவை ரூ. 1 4 0

7. அதிகரண ரத்நமாலை—
ஸ்ரீ. உ. வே. கபிஸ்தலம் தேசிகாசார்ய ஸ்வாமி
அருளிச்செய்தது ரூ. 3 0 0

இவை கிடைக்குமிடம்:—

A. ஸ்ரீநிவாஸராகவன், M. A.,
அம்பாள்புரம்,
புதுக்கோட்டை,
(திருச்சினுப்பள்ளி)

Printed by T. A. P. Srinivasavaradachariar,
at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, Little Conjeeveram.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami St., Tyagarayanagar, Madras.